முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

2 அணா

முரசு 1 | சென்னை | 10 — 12 — 54 | வெள்ளி | ஒலி 37

ஒரு கூடை எலுமிச்சம் பழம் ★ ★ அவருக்குத் தேவை! ★ ★

"எங்கள் ஒப்பற்ற தலைவர்—தேசப்பிதா மகாத்மா காந்தி எப்பொழுதும் 'ரகுபதி ராகவ ராஜாராம்' என்று சொல்லிக் கொண்டிருந்த ராம பிரானைப் பற்றிக் கேவலமாக நாடகம் நடிப்பதைச் சர்க்கார் அனுமதிக்கலாகாது. ஒருவரும் அந்த நாடகம் நடிக்க இணங்கலாகாது. இராமனை தூஷித்து என்முன் யாராவது பேசினால் அவரை கொன்று விட்டுத்தான் நான் மறு வேலை பார்ப்பேன்."

பேசியிருப்பது யார் தெரியுமா? யாரோ ஒரு முரட்டு ஆள்தான் இப்படிப் பேசியிருக்க வேண்டும் என்று கருதுகிறீர்களா? — இல்லை-இல்லை! பரமசாது ஒருவர்—சகஜானந்தா என்னும் பேர்வழி-சுவாமி என்னும் பட்டமுடன் தில்லை மாநகரத்தில் திரியும் யோகீஸ்வரர்-தவறிப்போய் எம்.எல்.ஏ. தேர்தலில் வெற்றி பெற்று சட்டமன்றத்தை அசிங்கப்படுத்திக் கொண்டிருக்கும் ஆத்மா! — அதுதான் இப்படி கொலைவாளைத் தூக்கிக் கொண்டு குதித்திருக்கிறது;

குதித்த இடம் எங்கே என்று நினைக்கிறீர்கள்? கோயில் பிரகாரத்திலே அல்ல! — கொலு மண்டபத்தில்— காங்கிரஸ் கட்சி கோலோச்சுகிறதே; அந்த சட்டமன்றத்திலேதான் அடிகள், இப்படி நுனிமரம் ஏறி அடிமரம் வெட்ட கோடரி தூக்கியிருக்கிறார், ராமனை தூஷித்தால் இவருக்குக் கோபம் வருமாம்—கொலை செய்வாராம்—சூத்திரன் தவம் செய்தான் என்று ஆத்திரம் கொண்டு, அவன் தலையை வெட்டியெறிந்த ராமனுக்கு வக்காலத்து வாங்குகிறார். வாலியை மறைந்திருந்து கொன்ற கோழைக்கு கொடி பிடிக்கிறார்—சீதையைக் காட்டிலே விட்டு, பெண்ணுரிமையைத் துச்சமென மதித்த துரோகிக்கு துதிபாடுகிறார்—

தம்பியின் முடியை தட்டிப் பறிக்க, தந்தையுடன் சூது செய்த தகா மனிதனுக்கு தத்துப் பிள்ளையாகப் போகிறேன் என்று தாண்டிக் குதிக்கிறார். அஸ்வத்தை அணைத்து மகிழ்ந்து அர்த்த ராத்திரியில் முனிவர்களுடன் கூடிக்கிடந்த அரசகுல மாதர்களுக்கு அவதரித்த அவலக்ஷணப் பிண்டத்திற்கு அடிமை விளக்கு தூக்குகிறார். சட்ட மன்றத்திலே என்ன பேசலாம் என்ற பண்பு மறந்தார் — சாதுக் கோலத்திலே எதைக் கூறலாம் என்ற முறையும் மறந்தார்—

சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பார்கள்! பொருளைப் புரிந்துகொள்ள வேண்டும் இந்த வாது புரியும் சாது! சாது மிரண்டால் காடுதான் கொள்ளாதே தவிர — நாடு கொள்ளாது என்று பழமொழியும் இல்லை—

ஆகவே — சாது, இருக்குமிடம் நாடு என்பதை மறந்து விடக்கூடாது!-- கொலை-களவு—சூது—காமம்—பொய்- ஆகியவை நிகழாவண்ணம் கட்டிக் காக்கும் பொறுப்புள்ள இடத்திலே நின்று, கமண்டலமேந்தும் கையிலே கத்தி ஏந்துவேன் என்று காட்டுமிராண்டிப் போக்கிலே கத்துவது என்பது நாடு அனுமதிக்கக் கூடாத செயல்! நல்லோர் ஆதரிக்கக் கூடாத காரியம்!—நேரு பாஷையிலே, ஆயிரம் "நான்சென்ஸ்" அடுக்கலாம்; அவ்வளவு மட்டமான பேச்சு இது! காந்தியின் வணக்கத்திற்குரிய ராமராம்—அவனை தூஷித்தால் கொலை செய்வாராம் — அகிம்சையின் உருவம் காந்தியின் அடியார்க்கு அடியார் இதுபோலக் கதறுகிறார். பாவம் — ஒருகூடை எலுமிச்சம் பழம் தேவைப்படுகிறது இவரது தலைக்கு!

பர்மாவில் பகுத்தறிவுப் பழம்!

★

சென்னையிலிருந்து நவம்பர் 23-ம் தேதி வந்த "ஜலகோபால்" என்னும் கப்பலில் புறப்பட்டு இரங்கூனுக்கு 28-ம் தேதி காலை 9 மணிக்கு பெரியார் ஈ. வே. ரா.வும், மணியம்மையாரும், ராஜாராம் பி. ஏ. அவர்களும், நரசிம்ம கிருட்ணம்மாளும் வந்து சேர்ந்தார்கள்,

பெரியாருக்காக காலை 6 மணி முதற்கொண்டு காத்திருந்த ப. தி. மு. க. தொண்டர்களும், திராவிடப் பெருங்குடி மக்களும் 'பெரியார் வாழ்க' 'ப. தி. மு. க. வாழ்க' என்று கரகோஷம் செய்தார்கள். பெரியாரும் புன்முறுவலுடன் இறங்கி கஸ்டம்ஸ் பார்வையிடுமிடத்திற்கு வந்து சேர்ந்தார், பார்வையிட்டு முடிந்தவுடன் ப. தி. மு. க. ஏற்பாட்டின்படி வரவேற்புக் குழு தலைவர் ஜி. பார்த்தசாரதியும், தொண்டர்களும் வரவேற்று, தி. மு. க. சின்னமிட்ட மலர்மாலைகளை பெரியாருக்கு இட்டார்கள். "வாழ்க பெரியார்" என்ற பேரொலி வானைப் பிளந்தது, பிறகு வரவேற்புக் குழு தலைவரும் பெரியார் குழுவும் காரில் ஏறி முன்கூட்டியே ப. தி. மு. க. ஏற்பாட்டின்படி கிழக்கு இரங்கூனிலுள்ள ஒரு மாளிகைக்குச் சென்றார்கள். பெரியார் அவர்கள் சில நிமிட நேரம் இளைப்பாறினார். பிறகு பத்திரிகை நிருபர்கள் பேட்டி கண்டார்கள். தமிழ் தினசரியான 'தொண்டன்' ஆசிரியர் பெரியார் அவர்களை சில கேள்விகள் கேட்டார். எல்லாவற்றிற்கும் பதிலளித்தார். "தொண்டன்" ஆசிரியர் "அறிஞர் அண்ணாவுக்கும், தங்களுக்கும் கொள்கையிலே அபிப்ராய பேதமுண்டா" என்று கேட்டார். அதற்குப் பெரியார் "அண்ணாதுரைக்கும் எனக்கும் கொள்கையிலோ அல்லது அபிப்பிராய பேதமோ இல்லை; அவருடைய பத்திரிகை மூலம் இயக்க கொள்கைகளைப் பரப்புகிறார். நான் என்னுடைய பத்திரிகை மூலம் பரப்புகிறேன்" என்று புன்முறுவலுடன் சொன்னார்.

★

Best copy available

★ தமிழ் நெஞ்சம் எங்கே? ★

“குழந்தைகளைப் பெற்றவர்கள் ஒரு சில வேளைகளில், கோபாக்கினியின் ஜுவாலையில் தங்கள் குணத்தை பொசுங்கவிட்டு சின்னஞ் சிறுர்களை அடித்துத் துன்புறுத்தி, அந்த பிஞ்சு உள்ளங்களிலே பாவ உணர்ச்சிக்கு வித்தூண்டுவது கொடிது, சமுதாய ஒப்பந்தத்திற்கே முரணானது.” என்று எண்ணி அத்தகு குணம் படைத்த பெற்றேர்களுக்குத் தண்டனை விதிக்கும் ராஜ சபைகளை நாம் பார்த்திருக்கிறேம்.

இத்தனை வயதிற்குமேல் இத்தனை வயதுவரை குழந்தைகள் அரசாங்கத்தின் கண்காணிப்பில் இருக்கத்தான் வேண்டும் என்ற அன்புக் கட்டளையின் பேரில், பச்சை ரத்தம் ஓடும் லட்சோப லட்சம் பாலர்களை தன்னுடைய மேற்பார்வையிலே வைத்திருக்கும் வலிமைமிக்க அரசுகள் உலகத்தில் இல்லாமலில்லை—பத்திரிகைகளிலே பார்க்கிறேம்-நேரில் பார்த்துவந்த பண்டிதரின் புதல்வி இந்திரா காந்தி நிருபர்களிடம் சொன்னதும் நமக்குத் தெரியும். “அந்த நாடுகளெல்லாம், முட்ட வரும் மாட்டைக் கண்டு மருளாமல், கொத்தவரும் பாம்பைக் கண்டு கலங்காமல் கண்சிமிட்டி, கலகலவென சிரிக்கும் மனித சமுதாயத்தின் செங்கீரைப் பருவம் தான் எதிர்கால அரசியல் ஆக்க மன்றத்தின் அச்சாணிகள் என்பதை உணர்ந்த நாடுகள்” என்று நாம் மட்டும் சொல்லவில்லை — நாடாளுபவர்களின் எதிர் முகாமிலே இருக்கின்றவர்கள் மட்டும் சொல்லவில்லை; ஆட்சிக்குடையின் நிழலிலே வாழ்கின்ற நல்லவர்களும், கல்வித்துறையில் தேர்ந்தவர்களும் சொல்லித் தான் போயிருக்கிறார்கள்.

பண்டித நேரு பள்ளிக் குழந்தைகளுக்கு தின்பண்டம் வழங்கினர். கேட்டகேள் விக்கு ‘கணிர்’ என்று பதில்சொன்ன மாணவனை கட்டியணைத்து கனிவாயை முத்தமிட்டார்.

தனக்குப்போடப்பட்ட ஜரிகை மாலையை தனது பவனியின் போது தெருவிலே தென்பட்ட ஏழைச் சிறுமிக்குப் போட்டு அழகு பார்த்து அகமகிழ்ந்தார்.

இப்படித்தான் தினத்தாள்களில் செய்திவரும். உடனே, “ஆகா அவரல்லவா அனைத்தையும் துறந்தவர்! என்ன ஈகை! என்ன தயாள சிந்தை!” என்று வானளாவப் புகழ்ந்து வருவார்கள் இந்நாட்டிலே வதியும் எச்சல் கையால் காகம் விரட்டாத கனதனவான்கள்! ஜவகர் ஜரிகை மாலையை தானம் செய்வானேன்! அடுத்த ஊரில் போடவிருக்கும் மாலைக்காக இப்போதே கழுத்தை சுத்தம் செய்கிறாரா? மழலைக் குழந்தைகளுக்கு மிட்டாய் வழங்குவது ஏன்? அவர்களைப் பெற்றெடுக்க அன்னை, தந்தைமார்களின் அன்புக்கு இலக்காகி அடுத்த ஐந்தாண்டுக்கு ‘கியாரண்டி’ பெறுகிறாரா? என்பதைசெல்வச் சீமாளர்கள் உணர்வதில்லை! உணர மாட்டார்கள்; அலுவல் பல அவர்களுக்கு உண்டு என்பது நமக்கு வெட்ட வெளிச்சம்! நீதிக்கு நாம்தான் போராடவேண்டும். “சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ளவர்களும், நடுத்தரவாசிகளும் செய்கின்றபுரட்சிகளில்தான் — தொடுக்கின்ற கணைகளில்தான் நிர்வாக உருளையே உருளுகிறது;. அவர்களால் கிடைக்கப் பெறும் நீதி நமக்கும் பயன்படுகிறது” என்பதை சீமான்புரம் புரிந்துகொண்டதாலோ என்னவோ அவர்கள் சிந்துபாடி சிரித்து மகிழ்கிறார்கள்.

அந்த ஏமாற்றுக்காரர்களைப் பற்றி நமக்குக் கவலையில்லை. ‘எனது கண் போனாலும் பாதகமில்லை; எதிரியின் கண் பொட்டையானால் போதும்’ என்று ஆசைப்படும் எண்ணச் சுத்த மற்றவர்களல்ல நாம். குலக் கொடிகளாக-குடும்பத்தின் ஒளி விளக்குகளாக எண்ணி வளர்க்கப் படும்மாசுமருவற்றமாணிக்கக் கட்டிகளின் எதிர்கால வாழ்வு கருகிவிடக் கூடாதென்பது தான் நமது ஆசை-நோக்கம் எல்லாம்! அந்த நல்லாசைத் தீபத்தின் ஒளிக்கற்றைகளை குன்றவைக்கிறார்கள் கோலேந்தியிருக்கும் காங்கிரஸ் கொற்றவர்கள். காட்டு வாழ்க்கையை தன்னகத்தே பெற்று நாட்டிலே செருக்கு நடை போட்ட குலதர்மக் கல்வித் திட்டத்தை தியாகராயநகர் தெருக்களை கண்ணீரையும், செந்நீரையும் கொண்டு நனைந்து போர்ப்பரணி பாடி இடுகாட்டுக்கு அனுப்பினேம். அந்த மகிழ்ச்சிகூட இன்னும் ஓயவில்லை. அதற்குள்ளாக எத்தனையோ முறை கோவைச் சீமான் சுப்ரமணியம் மிரட்டிப் பார்த்தார் நம்மையெல்லாம் மிரண்டவர்கள் என்று எண்ணி! கர்ஜனை செய்தார் ‘இன்னும் கைவிடப்படவில்லை புதிய கல்வித் திட்டம்’ என்று. நாம் அயர்ந்தாவிட்டோம் ‘இப்படை தோற்கின் எப்படி ஜெயிக்கும்? என வினவினேம். “திட்டம் கைவிடப்படவில்லையானால்— போராட்டமும் இன்னும் கைவிடப்பட்டு விடவில்லை” என்பதைமந்திரிக்கு சொன்னேம். இப்போது அந்த ‘மாமுனியின் மோகன்’ புறம் நின்று தாக்கப் புறப்பட்டிருக்கிறார். டாக்டர் அழகப்பாவின் தலைமையில் ஒரு ஆய்வுக்குழுவை சென்னை அரசியலார் நியமித்திருக்கிறார்கள். தொடக்கக் கல்வியின் தரத்தை இந்தக்குழு ஆராயுமென்று சொல்லப்படுகிறது. இந்தக்குழு தொடக்கக் கல்வியை ஆராயுமா? அல்லது ஆச்சாரியார் திட்டத்தை அப்படியே அங்கீகரிக்குமா என்பதல்ல நமக்குக் கிடைக்க வேண்டிய விடை!

கல்வித்துறை சீர்திருத்தம் அடிக்கடி தேவைதானு? உலக நாடுகள் அப்படித்தான் செய்து வருகின்றனவா? என்பதையே முதலிலே நாம் சிந்திக்க வேண்டும்.

(10-ம் பக்கம் தொடர்ச்சி)

ஆங்கிலம் அன்னிய மொழியானல் இந்திக்கு ஏன் ஆதிக்கம்?

★

டாக்டர், அ. சிதம்பரநாதர் விளக்கம்.

“இந்தியப் பல்கலைக் கழகங்களில் பாடம் சொல்லி வைக்கும் மொழி ஆங்கிலமாக இருக்கக் கூடாது என்றால், தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் அது தமிழாகத் தான் இருக்கவேண்டும் என்று கூறத் தயங்க மாட்டேன். தமிழ் மொழி பிறமொழிகளில் உள்ள எந்தக் கருத்தினையும் எடுத்து இயம்புவதற்குரிய செம்மை வாய்ந்த மொழி என்பதில் ஐயமில்லை,” என்று 1949 ல் இந்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட இராதா கிருஷ்ணன் கல்விக்குழுவினர் முன்னிலையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பர நாதன் எம். ஏ., விளக்கினர். மேலும் அவர் சொன்னர்:

“கல்வியில் வல்லுநர் எவரும் தாய்மொழி வழியாகத் தான் கல்வி கற்பிக்கப்பட்டால் அது மக்களுடைய உள்ளத்தில் நன்றாக ஏறிப் பயன் தருவதாக இருக்கும் என்பதை ஒப்புக் கொள்ளுவார்கள். ஒரு பாடத்தைக் கற்பிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்ற நேரமும் தாய்மொழி வழியாகக் கற்பிக்கின்றபொழுது குறையும் என்பதில் ஐயமில்லை. ஆனால், பல்வேறு தாய்மொழிகள் இந்தியா தேசத்தில் உள்ளமையால், ஏறக்தாழப்பதினன்கு அல்லது பதினைந்து மொழிகளில் பாடநூல்களை எழுதிக் கற்பிப்பதற்குப் பெரும்பணம் செலவாகும் என்பது ஒப்புக் கொள்ளக்கூடிய தொன்றே. அப்பணம் காணப்படவேண்டும். அத்துணையும் மக்களுடைய கல்வி வளர்ச்சிக்குப் பெருந்துணை செய்ததாகும் என்பது விளங்கும்,

தமிழ்மொழியைத் தமிழ்நாட்டுக் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் கல்வி கற்பிக்கும் மொழியாக ஆக்குவதற்குத் தடையாக உள்ளவை அரசியல்பற்றிய காரணங்களேயன்றிப் பிறஅல்ல. கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் இந்திமொழி வழியாகப் பாடங்கள் அனைத்தும் கற்பிக்கப்பட வேண்டும் என்று ஒருசாரார் கருதுகின்ற கருத்தினை வன்மையாகக் கண்டிக்கிறேன், ஆங்கிலத்தை விட்டுவிட்டு இந்தி வழியாகக் கற்பிக்க வேண்டும் என்று கூறுகிறவர்கள் அரசியல் காரணமாக அவ்வாறு கூறுகிறார்களேயன்றிக் கல்வி வளர்ச்சி குறித்து அன்று. தென்னட்டாரைப் பொறுத்த வரையில், தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், ஆங்கிலமும் இந்தியும் அன்னிய மொழிகளே.

நமக்குப் புரியாத அன்னிய மொழியாக ஆங்கிலம் இருப்பதால அதன் வாயிலாக பாடங்கள் கற்பிக்க கூடாது என்பது கருத்தானல், அதைப் போலவே தமிழ் நாட்டாரைப் பொறுத்தவரையில் அன்னிய மொழியாக உள்ள இந்தி மொழி வாயிலாகப் பாடங்களைத் தமிழ் நாட்டில் கற்பித்தல் எவ்வாறு பொருந்தும்?

தமிழினுடைய தோற்றமும் இந்தியினுடைய தோற்றமும் வெவ்வேறு. ஆதலால், ஆங்கிலத்தை நீக்கிவிட்டு இந்தியை அதனிடத்தில் புகுத்துதல் என்பது ஒவ்வாது எனக் கருதுகின்றேன். பல்கலைக் கழகங்களில் ஆங்கிலம் அல்லாத மொழியினல் பாடம் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்றால் தமிழ்மொழி வாயிலாகவே கற்பிக்கப்பட வேண்டும் என்பதை வற்புறுத்துவேன்.” என்றும் விளக்கியிருக்கிறார்.

(இராதாகிருஷ்ணன் குழுவினர் கூடி வெளியிட்ட இந்த அறிக்கை இந்தியப் பல்கலைக் கழக அறிக்கை-இந்தியா கவர்மெண்டு வெளியீடு – 1951; பக்கம் 690-691-ல்)

தலையங்கம்

சென்னை [10—12—54] வெள்ளி

கண்ணாடி வீட்டிலேயிருந்து......

சென்னை அரசாங்கம், திடீரென்று நாடகம், சினிமா இவைகளை ஒழுங்குபடுத்துவது என்கின்ற பெயரால் புதிய புதிய மசோதாக்களை வெளியிட்ட வண்ணமிருக்கிறது. நாடகத்தையோ, திரைப் படத்தையோ தடை விதித்து நிறுத்தக்கூடும் என்கின்ற ஷரத்துக்கள் அடங்கிய அந்த மசோதாக்கள் நாட்டிலே பெரும் பரபரப்பை உண்டு பண்ணும் என்பதிலே சந்தேகமில்லை.

உண்மையிலேயே நாடகம், சினிமாக்களை ஒழுங்குபடுத்தவேண்டு மென்ற நன்னோக்கோடு இவைகள் செய்யப்படுகின்றன என்று யாரும் ஒப்புக்கொள்ள முடியாது. அறிவியக்கத்தின் கருத்துக்கள் நாட்டிலே நடைபோடுகின்றன என்கிற ஆத்திர மிகுதியால் உந்தியெழும் மசோதாக்களே இவை!

எப்பக்கம் காணினும் இன உணர்ச்சியடா
எந்தமிழர் படைக்கு இணை இனி ஏதடா!

என்கின்ற போர்ப்பரணிகள் நாடகவாயிலாக பாடப்படுவது, கேடு சூழ்ந்தோர் காதுகளிலே இடியெனக் கேட்கிறது—

சாதிகள் ஏதடா? சாத்திரம் ஏதடா? வீதியில் நடமாடவும் அருகதையற்ற சூத்திரன் என்றாயே - வேதம் போகும் வாயை மென்றாயே! பேதம் போகவே பொன்னொளி வீசுது பாரடா!

இந்த சமத்துவ முழக்கம் சனாதன முனிவர்களின் சாத்திர நெஞ்சிலே சம்மட்டியடிகளாய் விழுகிறது! கட்டிக் காத்த கோட்டை-குட்டிச்சுவராக மாறுகிறது! தட்டிக் கேட்க ஆள் இல்லை என்று குட்டிக் கதைகளும்-கோணல் புராணங்களும் கூறிப் பிழைத்த குள்ளநரிகளின் புதர்கள் சாம்பல் மேடாகக் குவிகின்றன!

பறச்சியாவ தேதடா-பணத்தியாவ தேதடா-இறைச்சி தோல் எலும்பிலே இலக்கமிட்டிருக்குதோ?

என்ற சித்தர் தம் பாடல்களைப் பாமரர் படிப்பது தீது — எனப் பறை சாற்றி, திரைபோட்டுத் திரிந்தவர்களின் "தில்லுமல்லு"கள் அம்பலமாகின்றன திரை மூலமும், நாடக மூலமும்!

"மாறுபட்டு மணி துலக்கி, வண்டின் எச்சில் கொண்டுபோய் ஊறுபட்ட கல்லின் மீது ஊற்றுகின்ற மூடர்கள்!"

என்ற சித்தரின் சிந்தனை கீதத்தை சிறையில் பூட்டி மகிழ்ந்தவர்கள், இன்று அந்த கீதம்—காற்றிலேவரும் கீதமாகி விட்டதைக் கண்டு வயிற்றிலே நெருப்போடு அலைகிறார்கள்—

எப்படியும் இந்த எழுச்சியை அழித்துவிடவேண்டும் என்று துடிக்கிறார்கள். அந்தத் துடிப்பின் எதிரொலிதான் புதிய மசோதாக்கள்!

அமைதிக்குப்பங்கம் விளைவிக்கக்கூடிய நாடகம், சினிமாக்களை தடை செய்யும் அதிகாரம் வலுப்படுத்தப்படுகிறது. சென்னை அரசாங்கத்தின் சார்பிலே, காமராசரின் பெயரிலே-காகபட்டர் பரம்பரை சாதித்துக் கொள்ள எண்ணும் பெரியதோர் சதித்திட்டம் இது!—

அமைதிக்கு பங்கம் என்ற வாசகத்திற்குப் பொருள் என்ன? குறிப்பிட்ட நாடகத்தாலோ, திரைப்படத்தாலோ குழப்பம் எதுவும் நடைபெற்றால் நாடகத்தையோ, படத்தையோ தடை செய்ய நேரிடும்-இதன் உள்நோக்கம் என்ன? சிந்திக்க வேண்டிய விஷயமிவை! மதுரையிலே "ராமாயணம்" என்ற அறிவியக்க நாடகம் ஒன்றை நடத்த முடியாமல் செய்ய காலிகள் முயன்றார்கள். கலவரம் நடத்தினார்கள். காலிகளை அடக்கவோ, கலவரத்தை தடுக்கவோ வழிகாணாத நிலையில்—நாடகத்தையே தடுத்துவிட்டார்கள். இது போலவே—மதுரையைப் பின்பற்றி அறிவிக்கத்தினரின் எல்லா நாடகங்களையும் திரைப்படங்களையும் தடுத்துவிடமுனையும் தகாகப் போக்கினர், காலிகளை ஏவி கலகம் செய்வர்—நாடகமோ, திரைப்படமோ-அமைதிக்குலைவைக் காரணங்காட்டி தடை செய்யப்படலாம் இதுதான் சட்டத்தின் உள்நோக்கமாகும். இது, அறிவியக்க நாடகங்களையோ படங்களையோ தடுப்பது மட்டுமின்றி, அராஜகம் புரிய காலிகளையும் தூண்டிவிடத் துணைபுரியும் சட்டமாகும்.

"யார் எழுதிய படம்?"

"யார் நடிக்கும் நாடகம்?"

"சுயமரியாதைக்காரர்களா?"

"சரி! காலித்தனம் செய்வோம்—கல் எறிவோம்—மறியல் என்ற பெயரால் மாதர்களை வழி மறைப்போம்!"

"ஆமாம் அதுவே சரி! கலகம் ஏற்பட்டால் நாடகத்தையும், படத்தையும் தடைசெய்து விடுவார்கள்!"

இதுபோன்ற உரையாடல்கள் இனிமேல் பார்ப்பனீயத்திற்கும், அதனிடம் கைக்கூலி பெறும் விபீஷணப் பயில்வானிசத்திற்கும் நடைபெறத்தான் போகின்றன.

ஆனல் ஒன்று—சட்டம் கொணருவோர் சிந்திக்க வேண்டும்—அதோடு, எதிரிகள் வட்டாரமும் சிந்தித்துத் தீரவேண்டும்.

அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தி ஒரு நாடகத்தையோ, படத்தையோ தடை செய்து விடலாம் என்று சனாதனிகள் நம்பினால், அதே முறையைப் பின்பற்றி புராண நாடகங்களையும்-புராணப் படங்களையும் தடை செய்துவிட மற்றொரு சாரார் முயன்றால் என்ன செய்வது என்பதையும் சிறிது யோசித்துப் பார்க்கவேண்டும்.

ராதாவின் ராமாயணம் ராமனை இழிவுபடுத்துகிறது - ஆகவே தடுத்திடுக என்று கூற சனாதனிகளுக்கும், ஆரிய அடிவருடிகளுக்கும் அனுமார் தாசர்களுக்கும் உரிமையிருக்கும்போது, ராஜமாணிக்கத்தின் ராமாயணம் இராவணனை இழிவுபடுத்துகிறது-ஆகவே அதைத் தடுத்திடுக; இல்லையேல் மறியல் செய்வோம் என்று கூறுகிற உரிமை திராவிடர்களுக்கு மட்டும் இல்லாமல் போய்விடுமோ என்பதை ஓய்வான நேரத்திலாவது சட்டம் செய்ய சதிபுரிவோர் எண்ணிப் பார்த்திட வேண்டுகிறோம்.

அரக்கு மாளிகைக்குள்ளே அகல் விளக்கு எடுத்து வராதீர்கள். கண்ணாடி வீட்டிலேயிருந்து கல் எறியாதீர்கள்! பொங்கிடும் புது வெள்ளத்தை சிறு மணல் மேட்டால் தேக்கிவிடலாம் என்றும் கனவு காணாதீர்கள்!

இந்த எச்சரிக்கைகளை அனுதாபத்தோடு வழங்குகிறோம் - கேட்பின் நலம் - அல்லது, "தன்வினை தன்னைச் சுட்டது!" என்ற பழமொழி மெய்யாகும்.

ஆச்சாரியாரின் ஆணவ யோசனை!

★

சென்னை தியாகராய நகர் கிருஷ்ணகான சபாவில் பேசும்போது ஆச்சாரியார் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்:-

"தினந்தோறும் விடியற்காலையில், ஒருகால் மணிநேரம் தெருத்தெருவாக நாதசுரம் ஊதிச் சென்றால், மனதில் ஒருவித சந்தோஷம் ஏற்படும்"

நாதசுரக்காரர்கள், மார்கழி மாதத்து தாதர் போல—விடியற்காலையில் வெளிக் கிளம்பும் குடுகுடுப்பாண்டி போல அதிகாலையிலே தெருவிலே நாதசுரம் ஊதிக்கொண்டே நடக்க வேண்டுமாம். அதை ஆச்சாரியார் வர்க்கம் கேட்டுக் களிப்படையுமாம்! காதுக்கு விருந்தோடு விட்டாரே; அது மட்டும் "க்ஷேமம்"! நாதசுர வித்வான்கள் தெருவிலே ஊதிக் கொண்டு நடப்பதைவிட, அடையாறு கலாக்ஷேத்திரத்துப் பெண்மணிகள் காலையில் கதிரவன் புறப்பட்டதும், தாங்களும் புறப்பட்டு தெருத்தெருவாக நடனமாடிக்கொண்டே போனால் கண்ணுக்கு விருந்தாகவும், மனதுக்கு அதிக சந்தோஷமூட்டக் கூடியதாகவும் இருக்கும். இது போன்ற ஒரு யோசனையை ஆச்சாரியார் விரைவில் வெளியிட்டால் மிகவும் புரட்சிகரமாயிருக்கும். மந்திரியாக இருந்து திட்டங்களை வெளியிடுவதை விட மகானாயிருந்து அவர் வெளியிடும் திட்டங்கள் நாட்டை ஒரு கலக்கு கலக்கியே தீரும்!

கவனம் வை!

—★—

பாய்கின்ற சிங்கத்தின் பிடரி மீது;
படைத்தமிழன் கையிருக்கும். பார்ப்பா னுக்கோ;
வாய்ருசிக்கப் பால்கொடுக்கும் பசுக்கூட் டத்தின்
வால் ப்)பக்கம் கையிருக்கும், தீர்த்தம் ஏந்த!
நாயின்கால் போலமிக நெருக்கம் உள்ள
நண்பனென நம்பவைப்பான். எப்போதும் காக்
காய்பிடிப்பான்; கால்பிடிப்பான்; கத்தி வைப்பான்;
கவனம்வை; கவனம்வை; இவனி டத்தில்!

★ ★ ★

முப்புரத்தை எரித்தானும் கைலைப் பார்ப்பான்!
முகத்தினிலே மீசைஇல்லா கோழை ராமன்;
எப்படியோ அனுமானை வசப் படுத்தி,
இலங்கையிலே தீவைக்கச் செய்தான். இந்தத்
தப்பிலிகள், திராவிடரை ஏய்த்து; வாழ்ந்து;
செத்துவிட்டார்! எனினும்இவர் உடல் எலும்பு,
இப்போது கிடைத்தாலும், தூள்தூ ளாக்கும்
எண்ணங்கோள், எண்ணங்கோள், தயங்கி டாதே!

★ ★ ★

நெற்றியிலே பொட்டிருக்கும்; போர்க் களத்தில்
நின்றிருந்தால், வேல்வைத்த புண் இருக்கும்.
மற்றபடி, நெற்றியிலே விழி இருக்க,
மார்க்கமில்லை. அதனாலே, அதனைப் போன்ற
குற்றமுள்ள கற்சிலைகள்; கோடும் வைதீகக்
கருத்துள்ள சித்திரங்கள்; மதங்கள்—தன்னை,
உற்பத்தி செய்தவனும், நஞ்சும் ஒன்றே!
உணர்ந்திடுக; உணர்ந்திடுக வரவேற் காதே!

★ ★ ★

பலதெய்வம் இருக்கத்தான் வேண்டும்—என்னும்,
பார்ப்பார எண்ணங்கள்; சடங்கு நூற்கள்;
தலைவிதியை, மறுபிறப்பை, நம்ப வைக்கும்
சாத்திரங்கள்; கம்பராமாய ணத்தை,
நிலைநாட்டும் நாடகங்கள்; அதனை நாட்டில்,
நிறுத்திவரும் அரசாங்கச் சட்டம்—தன்னை
இலைச்சருகு. மரவிறகு. பிரேதம் போலே,
எரித்திடுக; எரித்திடுக; சுடர் நெருப்பால்!

★ ★ ★

தளபதியைத்; தமிழ்மகனை; இலங்கை தந்த,
தங்கத்தை; இராவணனை; அறிஞர் எல்லாம்,
வளையாத வெற்றிகண்ட வீரன் என்று
வருணிக்க; அதைமறுத்து, அரக்கன் என்றும்;
ஒளிவீசும் கடல்முத்தை, வெண்சுண் ணும்பின்
உருண்டைஎன்றும்; பழிக்கின்றான் பார்ப்பான். இந்த
இளக்காரப் பேச்சுதனைக் கேட்டுக் கொண்டு
இருக்காதே, இருக்காதே, அடக்கு வாயை!

★ ★ ★

தோட்டத்து மலர்போலச் சிரித்து; ஆளன்
தோள்மீது சாய்ந்தபடி மங்கை,—காமப்
பாட்டளிக்க; கணவன்,அவள் புதுக் கன்னத்தில்,
பதினொரு வகைமுத்தம் அளிக்கப், பின்னர்;
வீட்டுக்குள், என்னும் கூட்டுக் குள்ளே,
விளைவிக்கும் காதல்தனை, வெறுத்துப் பேசும்,
ஒட்டிண்டிப் பரதேசித் தத்து வத்தை,
வீழ்த்திடுக, வீழ்த்திடுக, விவாதத் தாலே!



குறளோவியம்

ஒருமனிதன் இயற்கையெய்தி விடுகிறான். மறைந்த அந்த மனிதனைப்பற்றி ஊரார் பேசிக்கொள்கிறார்கள். இறந்தவன் நல்லவனா கெட்டவனா என்று பிரச்சினை எழுகிறது. ஒருவன் இறந்தவனைப் பற்றித் தீர்ப்புகூற புதிய வழிகண்டுபிடிக்கிறான்.

"ஏன் இப்படி கஷ்டப் படுகிறீர்கள்? மறைந்தவன் எத்தகையோன் என்பதை அறிய அவனது மகனைப்பார்த்தால் தெரிகிறது—திருவள்ளுவரே கூறியிருக்கிறாரே; நடுவுநிலை உடையவரா நடுவுநிலை இல்லாதவரா என்பது அவர்களின் மக்களால் காணப்படும் என்று!"

இதுபோல அவன் விளக்க முறைத்து அதற்காக குறியையும் கூறுகிறான்.

"தக்கார் தகவிலர் என்பதவரவர்
எச்சத்தாற் காணப்படும்"

இதுதான் அவன் ஆதாரங் காட்டிடும் குறள். எச்சமென்றால் மக்கள் எனப் பொருள் கொண்டு, மக்களைப் பார்த்து, பண்பைப் புரிந்து கோள் என்று உரை கூறியவர்கள் தவறான பாதையில் நடந்து விட்ட காரணத்தால் மேற்கண்ட தீர்ப்பை வழங்க அவன் முன்வந்திருக்கிறான். அந்த உரையின்படி உலகத்தை நோக்கினால் குறளே பொய்த்துவிடும் போல் தோன்றுகிறது.

காந்தியாரின் பெருமையை அவரது எச்சமான அப்துல்லா காந்தியைப் பார்த்து தெரிந்து கொண்டால் என்ன ஆவது? புராணக்கதை எழுதி யிருக்கிறார்களே; அதிலே வரும் பிரகலாதனின் பண்பைப் பார்த்து, அவனது தந்தை இரணியனின் பண்பைக் கணக்கிட இயலுமா என்ன?

இதுபோன்ற வேறுபாடுகளை உன்னிப் பார்க்குமிடத்து, "எச்சம்" என்னும் சொல்லுக்கு சரியான பொருள் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

எச்சமென்றால்—எஞ்சி நிற்பது—என்றுதானே பொருள். ஒருமனிதன் இறந்தபிறகு எஞ்சி நிற்பது அவன் மக்கள்தான் என்பது எப்படிப் பொருந்தும்? அவனுக்குக் குழந்தைகளே பிறக்காமல் போயிருந்தால் அவன் தகவிலர் பட்டியலிலே சேர்க்கப்பட வேண்டியவன் தானா? திருமணமே செய்து கொள்ளாத எத்தனையோ பெரியவர்களும் தலைவர்களும் எச்சம் வைக்காத காரணத்தால், தக்கார்—தகவிலர்—என்ற தராசுக்கே வராமல் போய்விடுவார்களா? ஆகவே—எச்சம் என்பது மக்களைக் குறிப்பிடும் சொல் அல்ல என்பது உறுதியாகிறது.

எச்சம்—எஞ்சிநிற்பது! — ஒருமனிதன் இறந்த பிறகு, எஞ்சி நிற்கிற புகழோ—அல்லது பழிச்சொல்லோதான் அவனைப் பற்றிய நல்ல தீர்பைக் கூறவல்லது!

காந்தியை உத்தமர் என்று கூறுகிறோம்—தக்கார் வரிசையிலே நிற்கிறார்—காரணம் எஞ்சியிருக்கும் அவரது புகழ்தான்!

அவரைக் கொன்றவன் தகவிலர் பட்டியலில் முதலிடம் பெறுகிறான் — காரணம் அவனுக்குப்பின் எஞ்சியிருப்பது பழிச்சொல்! குறளைப் படிக்கிறோம் — வள்ளுவன் வாழ்க— என்று கூவுகிறோம்—வள்ளுவனின் எச்சம் திருக்குறள்! மனுநீதியைப் படிக்கிறோம்—ஒரு குலத்துக் கொருநீதி என பழிச்சொல் கூறுகிறோம். இது அவனுக்குப்பின் எஞ்சியதாகும்—

இப்போது குறளின் உண்மைப் பொருள் நமக்குப் புரிகிறது—தக்காரா—தகவிலரா என்பது அவருக்குப்பின் எஞ்சியுள்ள புகழாலோ—அல்லது பழியாலோ நிர்ணயிக்கப்படும்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்."

— கருணா

நினைவுச் சின்னம்!

மணப்பாறை—டிச. 5 கல்லக்குடி அறப்போர் வீரனும், சிறை தந்த பரிசான காச நோயால் உயிர் நீத்த வருமான இளைஞர் குமரவேலனின் நினைவுச் சின்னம் தி. மு. கழகத் தோழர்களது பெரு முயற்சியால் மணப் பாறையில் சுமார் பதினொரு அடி உயரம் எழுப்பப் பட்டுளது. பார்ப்பவர் மனதைக் கவரவும் இயக்க ஆக்க வேலையை ஊக்குவிக்கவும் பயன் படத்தக்கதாகவும் மணப்பாறை நகரின் நடுவில் நினைவுச்சின்னம் விளங்குகிறது. 27. 11. 54.ம் நாளன்று தோழர். மீ. சு. இளமுருகு பொற்செல்வி வேண்டிக் கொள்ள, தோழர் ஈ. வி. கே. சம்பத் நினைவுச் சின்னத்தின் மீது தி. மு. கழகக் கொடியை உயர்த்தி குமரவேலனின் படத்தையும் திறந்து வைத்தார்.

★



"டைரக்டர் சார்! பணத்தைப் பற்றிக் கவலையே இல்லை-உங்கள் இஷ்டத்துக்கு செட்டுகள்போட்டுக் கொள்ளலாம் — ஸ்டுடியோவுக்குள் அமெரிக்காவின் கட்டிடங்கள் வரவேண்டுமா? மாஸ்கோவின் தெருக்களை அமைக்க வேண்டுமா? கடல் ஒன்று கட்டவா? ககனத்தையே அழைக்கவா? மழையா? புயலா? பூகம்பமா? எது வேண்டுமானாலும், என்ன செலவானாலும் சரி-படம் பெரிய படமாக இருக்கவேண்டும்-பெரிய படம் என்றால் நாற்பதாயிரம் அடியோ-அல்லது சினிமா ஸ்கோப் மாதிரியோ அல்ல சார்! ஒரு வருஷத்துக்கு ஒரு ஊரிலே ஓடவேண்டும்-இந்தப் படத்தைப் பற்றி பேசாதவர்கள் பிறக்காதவர்களாகத் தானிருக்க வேண்டும்-வசூல் மட்டுமல்ல லட்சியம்! அருமையான கதை! அபூர்வமான வசனம்! அற்புதமான டைரக்ஷன்! அநாயசமான நடிப்பு! அமோகமாக கூட்டம்! இப்படி ஒரே பரபரப்பு நாட்டிலே ஏற்பட வேண்டும் — நான் இந்தப் படத்தை பணம் சம்பாதிப்பதற்காக எடுக்கவில்லை-இதில் வரும் லாபம் முழுவதையும், நாலைந்து கல்லூரிகள் கட்டுவதற்கு செலவிடப் போகிறேன்-உங்களுக்குப் பிடித்தமான எழுத்தாளரையே ஏற்பாடு செய்துவிட்டேன்--முற்போக்கு எண்ணத்தோடுஎழுதுவதில் அவருக்கு நிகர் அவரேதான், அரைக் கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கிவிட்டேன்—நடிக நடிகையர் தேர்தல்—படப்பிடிப்பு-உடனே ஆரம்பமாக வேண்டும்"

படமுதலாளி, பரமசிவானந்தம் அவர்கள் முற்போக்கு எண்ணங் கொண்டவர்—நல்ல கருத்துள்ள படங்களை மக்களைத் திருத்தும் வகையில் வெளியிட வேண்டுமென்ற அவா அதிகமுடையவர்—படம் எடுத்துத்தான் பணம் சம்பாதிக்க வேண்டும் — வாழ்வு நடத்த வேண்டும் என்ற நிலையிலே உள்ளவருமல்ல; பணத்தை அளவுக்கு மேல் குவித்துஅழகுபார்க்கும்கருமித்தன முடையவருமல்ல. வள்ளல் தன்மையும், அதே நேரத்தில் நாட்டுக்குத் தேவையான எண்ணங்களை கலைகள் மூலம் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்ற கொள்கையும் பெற்றவர். பல லட்ச ரூபாய்க்கு சொந்தக்காரரான அவர். உலகத்தையே ஒரு கலக்கு கலக்கக் கூடிய ஒப்பற்ற பெரும் படம் ஒன்றை எடுப்பதற்காக தன் சொத்தில் பெரும் பகுதியான ஐம்பது லட்ச ரூபாய்களை முதலாக வைத்தார்—ஸ்டுடியோ ஒன்றைத் தனியாக அமைத்தார், படம் வசதியாக எடுப்பதற்காக! மிகப்பிரசித்தி பெற்ற டைரக்டர் ஒருவரும், மக்களிடம் செல்வாக்கு பெற்ற வசன மேதை ஒருவரும், புதுமைக் கவிஞர் ஒருவரும் ஒப்பந்தம் செய்யப் பட்டனர் — தன்னுடைய நல்ல உள்ளத்தை, பட முதலாளி அவர்களிடம் திறந்து சொல்லி விட்டார் — அவர்களும்—அகிலம் வியக்கும் அறிவுக்கதை யொன்றை அழகான பாடல்களுடன் தயார் செய்து விட்டனர். படப்பிடிப்பு ஆரம்பமானது. புகழ் வாய்ந்த நட்சத்திரங்கள் ஒருவர் பாக்கியின்றி படத்தில் நடித்தனர் — நாடெங்கும் அந்தப் புதிய படத்தைப் பற்றியே பேச்சு — "எப்போது வெளி வருமோ" என மக்கள் ஏங்கி நின்றனர் — ஐம்பது லட்சம் ரூபாயும் கரைந்து, படப்பிடிப்பு வேலை — ஏறத்தாழ ஒரு கோடியை எட்டிப் பிடித்தது - பட முதலாளி, சில இடங்களில் கடன் வாங்கி படத்தின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தினர். படம், இதுவரையில் யாரும் வெளியிடாத அந்த அளவு, உயரிய முறையில் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் வகையில் அமைந்தது — யாரும் துணிந்து சொல்லமுடியாத புரட்சிக் கருத்துக்களை, நாகரீகமான முறையிலும், ஆபாசமற்ற தன்மையிலும், அந்தப் படம் விளக்குவதாயிருந்தது - தொழிலாளர் உயர்வுக்கான வழிகள் — சாதி பேதமற்ற சமுதாயம்—கடவுள் பெயரால் நடைபெறும் கயமைச் சேட்டைகள் — கலையின் பெயரால்நிகழும் ஆஷாடபூதித்தனங்கள்—மதம் மக்கள் சமூகத்தை எப்படிப் பாழ்படுத்துகிறது என்ற விளக்கம்—இத்தனையும் அடங்கிய ரத்தினமாக அந்தப் படம் அமைந்து விட்டது—நடிப்பு - ஆகா! இதயத்தின் துடிப்பு! கதை - வாழ்வின் ஒளி - வசனம் - ஜீவ காவியம் - பாடல்கள் — தேன்பாகு-கற்கண்டு - டைரக்ஷன் - பாராட்டவே இயலாது! அத்துணை சிறப்பு - அத்துணை சிறப்பு!

படம், ஆயிரம் ஆயிரம் அடியாக வளர்வதிலிருந்து, அது பதினாயிரம் அடிகள் வளரும் வரை—தினந்தோறும் பட முதலாளி அதைப் பார்த்துப் பார்த்து ரசிப்பார் - தேசமெங்கும் புகழக் கூடிய ஒரு பெரிய படத்தை அளிக்கப் போகிறோம் என்ற ஆனந்தம் அவரை ஆட்கொண்டது - நண்பர்கள் வருவார்கள்-படத்தைக் காட்டுவார் - மகிழ்வார்கள் - பாராட்டுவார்கள்.

ஒரு சிலர் மட்டும் — சிறப்பான படந்தான் — ஆனால் சென்சார் ஆகுமா? என்று சந்தேகத்தோடு கேட்பார்கள். அதைப் பற்றிக் கவலையே இல்லை என்பார் பட முதலாளி—இப்போதென்ன அக்கிரமமான விஷயத்தைப் படத்தில் சொல்லிவிட்டோம்? செக்ஸ் அப்பீலா இருக்கிறது? அல்லது ஆபாச வசனமா? மறுக்கக் கூடிய விஷயம் என்ன இருக்கிறது? புராணப் படங்களில் வரும் ஆபாசங்கள் எதுவும் இதிலே கிடையாதே! தாராசசாங்கத்தைப் போலவா படம் எடுத்திருக்கிறோம்? இல்லையே—சென்சார் எதற்காக தலையிடப் பேர்கிறார்கள்? என்று ஆத்திரமாகக் கேட்டார் பரமசிவானந்தம். அவரது நண்பர்களைப் போலவே, நாட்டு மக்களும்—சென்சாரைப் பற்றிக் கவலைப் பட்டுக் கொண்டிருந்தார்கள். சென்சார் என்பது, ஒரு பாரபக்ஷம் வாய்ந்த ஸ்தாபனம் என்பது, நாட்டு மக்களின் தீர்ப்பு. அதனால், பரமசிவானந்தம் எடுக்கும் புரட்சிப் படத்திற்கு ஏதாவது ஆபத்து வரும் என்று எதிர்பார்த்தனர். சென்சாருக்கு முன்பே, படத்தைப் பற்றிய விளம்பரங்கள் வெளிவந்தன.

'மதவாதிகளுக்கோர் மருந்து! மறுமலர்ச்சித் தூதருக்கு விருந்து!'

"ஆண்டவன் பெயரால் அவனியை ஏமாற்றாதே! ஆண்டான் அடிமை அகிலத்தில் வேண்டாம்!"

இது போன்ற கொட்டை எழுத்து வாசகங்களோடு புரட்சிப் படத்தின் விளம்பரங்கள், ஏடுகளில் மின்னின.

கடைசியாகப் படம் சென்சாருக்கும் சென்றது — படத்தில் எந்தக் காட்சியும் பாதிக்கப் படாத வகையில் இரண்டே இடங்களில் தான் சென்சார் வெட்டி யிருக்கிறார்கள் என்ற சேதி நாடெங்கும் பரவிற்று — அப்பாட, படம் தப்பிப் பிழைத்தது, என்று நாட்டோர் பெருமூச்சு விட்டனர்.

குறிப்பிட்ட தேதியிலே படத்தை வெளியிடும் விளம்பரம் வந்ததுஅடடா படத்தின் பெயரை இது வரையில் சொல்லாமல் இருந்து விட்டேனே— "செவ்வானம்" என்பதுதான் அந்தப் புரட்சிப் படத்தின் பெயராகும்.

நானூறு தியேட்டர்களில் ஒரே நாளில் படம் வெளியிடப் பட்டது—தியேட்டர்கள் இடிந்து நொறுங்கிவிடுமோ, என்கிற அளவுக்கு திரளான கூட்டம், எந்தப் படத்திற்கும் இவ்வளவு பரபரப்பு இருந்ததில்லை.

தலைநகரத்திலே, திரையிடப் படும் தியேட்டருக்கு பரமசிவானந்தம் வருகை தந்திருந்தார். அவரைக் கண்ட மக்கள், ஆவலோடு வரவேற்று குதூகலித்தனர்.

படம் ஆரம்பமானது.

"செவ்வானம்" என்ற தலைப்பைக் கண்டதும் ஒரே கை தட்டல் - வயிற்றெரிச்சல்காரர்கள் சிலரின் மனதைப் புண்படுத்தக் கூடிய அளவுக்கு மக்களின் ஆரவாரம்- "கதை வசனம்" என்ற பெயர் காட்டப்பட்டது; அதனை யொட்டி, நடிகர்கள்—டைரக்டர் பெயர்கள் வந்தன. இறுதியில், "தயாரிப்பு பரமசிவானந்தம்" என்ற எழுத்துக்கள் பெரும் கரகோஷத்தைப் பெற்றன— அடுத்து முதல் காட்சி என்ன என்று மக்கள் துடித்தனர்—

● தொடர்ச்சி 10-ம் பக்கம்

பகவானின் பிரேரணை !

●

பம்பாயிலிருந்து அரசியல் நிர்ணய சபைக்கு அபேட்சா பத்திரம் தாக்கல் செய்த 24 பேர்களில் கே. எம். பெனிகாரி என்பவரும் ஒருவர். அவருடைய பத்திரம் கீழ்க் கண்ட படிப் பூர்த்தி செய்யப் பட்டிருந்தது,

பிரேரிப்பவர்: கடவுள், ஆமோதிப்பவர்: தேசம்
ஆனால், தேர்தல் அதிகாரி, "கடவுளோ அல்லது தேசமோ பம்பாய் சட்டசபையின் அங்கத்தினர்கள் அல்லவாதலால் இந்த அபேட்சா பத்திரம் நிராகரிக்கப் படுகிறது" என்று கூறிவிட்டார்!

புயல் நுழைந்தது! 17

புதையல்

மு. கருணாநிதி

டாக் துரை, கூலிக்காரப் பெண்களைத் தன்வெறி தீர்க்கும் கருவிகளாகவே கருதி வந்தான். முதலாளியின் தயவு கிடைத்தால் வாழ்க்கையில் முன்னேறலாம் என்று தப்புக் கணக்குப் போட்டுக்கொண்ட ஒரு சில அப்பாவிப் பெண்களும் அவனது ஆட்டத்திற்கு அடிபணிந்தார்கள். பாட்டிக்கு உள்ளூர பயம் பிடித்துக் கொண்டது. அந்தப் படுபாவி முதலாளியின் பார்வை அடிக்கடி என் அம்மாவின்மீதும் விழ ஆரம்பித்ததாம். பாட்டி, அம்மாவிடம் "வள்ளி! எச்சரிக்கையாயிருக்க வேண்டுமடி! டாக் துரையின் நடவடிக்கை எனக்கு அச்சத்தை உண்டாக்குகிறது—ஜாக்ரதை" என்று சொல்லிக் கொண்டிருப்பார்களாம். அம்மா—துணிவுமிக்கவர்கள். நியாயத்திற்குப் புறம்பாக யார் எதைச் செய்தாலும் அதை தீவிரமாகக் கண்டிக்கக் கூடிய சுபாவம் உள்ளவர்கள். டாக் துரை, அம்மாவின் பக்கம் வந்து, "வாட்-வல்லி" என்று இளிக்கும்போதெல்லாம், அம்மா, சடக்கென்று "வாட்டாவது பூட்டாவது-போய்யா" என்று முகத்தைத் திருப்பிக் கொண்டு ஆத்திரத்தோடு பேசுவார்களாம். டாக் துரை, பாச்சா பலிக்காது என்று தெரிந்துகொண்டு, திரும்புவானும். ஆனாலும் அவன் ஒரு அரிய சந்தர்ப்பத்தை எதிர் பார்த்தேயிருந்தான் என்பது அவனது நடவடிக்கைகளால் சொல்லிக் கொண்டிருக்கிறார்ன்கு புலனாகிவிட்டது, அம்மாவுக்கும் பாட்டிக்கும்.

தேயிலைத் தோட்டத்து வேலைகள் முடிந்து, துரையின் வீட்டு வேலைகளையும் கவனித்தால் அதிகமாக சம்பளம் கிடைக்கும் என்ற எண்ணத்தின்மீது, மாலை நேரங்களில் அப்பாவும் அம்மாவும் டாக் துரை வீட்டில் சில மணி நேரங்கள் பணி புரிவதுண்டு. அப்பா கூடத்தானேயிருக்கிறார் என்ற தைரியத்தில் அம்மாவும் அந்த வேலையை ஒப்புக்கொண்டார்கள். இல்லாவிட்டால், மூன்று நான்கு உறுப்பினர்கள் உள்ள எங்கள் குடும்பம் கஷ்டமில்லாமல் வாழமுடியாதே — நான் சிறுவன் — பள்ளிக்கூடம் போகவேண்டும் — இரண்டொரு மாதங்களில் எனக்கு ஒரு தம்பியோ தங்கையோ பிறக்கப் போகிறது என்று பாட்டி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்-அதுவும் பிறந்துவிட்டால், வீட்டிலே ஐந்து உறுப்பினர்களாகிவிடுவோம். அதையெல்லாம் சமாளிக்க, எப்படியோ கஷ்டப் பட்டு சம்பாதித் தால் தானே முடியும்—பெருவாழ்வு வாழ்ந்தோமே என்று பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தால் போதுமா? இறந்த காலத்தை எண்ணி, நிகழ் காலத்தை கண்ணீர் வடிக்கவே உபயோகித்துக் கொண்டால் எதிர் காலமும் இருட்டாகத் தானே போய்விடும்.

ஆகையால், நடந்தவைகளை மறந்து—தோட்டக் கூலியாக மட்டுமின்றி, டாக் துரை வீட்டு வேலைக்காரர் களாகவும் என் பெற்றோர்கள் வியர்வை வடித்தார்கள். எட்டுமாத கர்ப்பவதி என் அம்மா—அப்போதுதான் அந்த வேலையை அம்மா அங்கு ஒப்புக் கொண்டது—என் ஆருயிர்த் தங்கை தங்கம் அம்மாவின் வயிற்றிலே

வளர்ந்துகொண்டிருந்த நே
அம்மா. ஓடியாடி உழை
சம்பாதிக்கிறார்கள்-அம்மா
சிரமத்தைப் பார்த்து, பா
சொல்லுவார்களாம் "
வள்ளி! கர்ப்பவதிகள் நி
வேலைகள் செய்தால்தான்
பிரசவம் ஆகும்" என்று

இதே பாட்டி, ஏழையா
போனபிறகு இப்படிச் சொ
ன்னர்கள்—பணக்காரப் பா
யாகவே இருந்திருந்த
"வள்ளி உடம்பு கெட்டுவி
ஓய்வு எடுத்துக்கொள் - க
வதி கஷ்டப்படக் கூடா
என்றும் கூறியிருப்பார்கள்.

எப்படியோ, அம்மா-
வுக்கு மீறி சிரமங்களை ஏ
குடும்பத்தைக் கவனித்தா
குழந்தைகளாவது சந்தோ
யிருக்கட்டுமே என்று அ
அடிக்கடி சொல்
கொண்டே கண்ணீர் சிந்து
களாம். அப்படிப்பட்ட அரு
அம்மாவைத்தான் நான்
வயதிலேயே இழந்தேன்—
வெள்ளத்திலே — என்
பெற்ற தாய் மிதந்துகிட
கோரக் காட்சியை இந்
கண்ணாலே கண்டே
அய்யோ, அவ்வளவு தொ
களையும் தாங்கிக்கொ
உழைத்த அந்த உத்தமி
எண்ணமாவது ஈடேறி
என்றால் அதுவுமில்லை. கு
தைகளாவது நன்றாயிருக்
டும் என்று உழைத்தார்
அதையும் பாரக்காமலே அ
கள் போய்விட்டார்கள்.

டாக் துரையின் பங்
விலே வேலைபார்த்துவி
அப்பாவும் அம்மாவும்
டுக்கு வரும்வரையில்
வீட்டு வாசலிலேயே நி
கொண்டிருப்பேன். அ
என்னைத் தூக்கி முத்த
வாள். அப்பா, என் கன்
னைக் கிள்ளிக் கொஞ்சு
அந்தக் குழந்தைப் பருவ
நிகழ்ச்சியெல்லாம் இப்பே
கூட எனக்குக் கனவுபோ
இருக்கிறது.

"அம்மா!—பாப்பா எப்
பிறக்கும்?" என்று நான்
லைத் தமிழிலே கேட்பேனு
பாட்டி, என்னை வாரி அ
துக் கொண்டு பரிகாசம்
வார்களாம். இதை யெல்
பாட்டி என்னிடம் அ

Filmed as bound

…லையிலே யிருந்த ஒரு குடும்பத்திலே கொலை நிகழுமளவுக்கு ஏற்பட்ட குழப்பந்தான் என்ன என்று கேட்கத்தான் தோன்றும். குழப்பம் அப்படியொன்றும் முக்கியமானதல்ல. ஆனால் அந்தக் குழப்பம் கொலைக்குக் காரணமா என்றால் அதுவுமில்லை. கொலைக்கு, அந்தக் குழப்பம் முழுவதுமே காரணமில்லையே தவிர கொலைக்கான சூழ்நிலைகளை உண்டுபண்ணித் தருவதற்கு அந்தக் குழப்பம் ஒரு வகையில் காரணமாகத் தானிருந்திருக்கிறது: "என்ன உளருகிறாய்?" என்று கேட்பது போலிருக்கிறதே; பெரியவரே உங்கள் பார்வை!

குழப்பத்தைப் பற்றி விளக்குவதால் ஏற்படுகிற குழப்பம் இது! அவ்வளவுதான்! அம்மாவுக்கும் அப்பாவுக்கும் தகராறுகள் ஏற்பட்டு, அது முற்றிப் போய் ஒருவரோடு ஒருவர், பேசாமலேயே சில வருடங்கள் வாழ்ந்திருக்கிறார் என்பதெல்லாம் உண்மை. என் தங்கை பிறந்தபிறகு, இருவரும் இரு துருவங்களாகி விட்டனர். கணவன், மனைவி என்பது, கடமையளவுக்குப் போய் விட்டதே தவிர, பாசம், நேசம் எல்லாம் பழாகி விட்டது. என் தந்தை, ஒரு தத்துவஞானி போல, வாழ்வு—சாவு—காதல்—இவைகளைப் பற்றியெல்லாம் பேச ஆரம்பித்து விட்டார். துறவிகளுக்கு உலகத்தைப் பற்றி எழுதும் வெறுப்பைப் போல, என் தந்தைக்கும் வெறுப்பு எழுந்து விட்டது. இந்த வெறுப்பு ஏன் எழுந்தது? அப்பா சந்தித்த பல சம்பவங்கள்தான் இத்தகைய வெறுப்புக்குக் காரணம் என்பதை அவர் எழுதியுள்ள டைரிக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. குப்பன் சீதா—காதல் குழப்பம் அப்பாவின் உள்ளத்திலும் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது!—காதலுக்கு, ஒரு ஆண்மகன் தரும் முக்கியத்துவம் எவ்வளவு மட்டமானது என்பதை குப்பனுடைய போக்கிலிருந்து அவர் கணக்குப் போட்டு விட்டார் — அதுபோலவே காதலுக்கு பெண்கள் தரும் மதிப்பு எத்தகையது என்பதற்கு மற்றொரு உண்மைச் சம்பவத்தை அவர் தனது டைரியில் விபரமாக எழுதியிருக்கிறார். இந்த சம்பவந்தான், அப்பா அம்மா தகராறுக்கு மூலகாரணம். டைரியில் அவர் எழுதியுள்ள சுவையான பகுதிகளையும் சம்பவத்தையும் சுருக்கி, நினைவு இருக்கும் வரையில் கூறவிரும்புகிறேன். டாக்துரைக்கு ஒரு மகள் உண்டு-அவளுடைய பெயர் மேரி. அவள் இலங்கையிலே பிறந்து வளர்ந்தவள். ஆங்கிலமும், கூடியவரை சிங்களமும், தமிழும் பேசக்கூடிய திறமை வாய்ந்தவள். வெள்ளைக்கார வீட்டுப்பெண் என்றால், நவநாகரீகத்துக்குக் கேட்க வேண்டுமா? அதிலும் மேரி, புதிய

வேண்டுமென்று ஆசைப்படுகிற ஒரு யுவதி, ஏற்கனவே உடுத்தியிருக்கிற அரை ஆடைகளையும் கால் ஆடைகளாகக் குறைத்து அணிந்து கொள்வது பற்றி பெரிய பெரிய ஆராய்ச்சிகள் நடத்துவாள். நாகரீகத்தின் தீவிரமான வேகம், நிதானமின்றி அலைமோதுகிற காரணத்தால், ஆடையின்றி வாழ்ந்த காட்டுமிராண்டிக் காலத்துக்கு மக்களை இழுத்துப் போகிறது என்பதற்கு ஒருநல்ல எடுத்துக்காட்டாக, அந்தப் பகுதியிலே மேரி விளங்கினாள். அவளுக்கு ஜோசப் என்று ஒருகாதலன் உண்டு. உறவினன் கூட! அவனும் அவளும் நடுவீதியிலே கைகோர்த்துக் கொண்டு ஆடுகிற ஆட்டங்களும், கேளிக்கை விநோதங்களும் - பார்ப்பதற்கு ஆபாசமாயிருக்கும். அத்தகைய காதலின் உச்சக்கட்டத்திலே அவர்கள் அலைந்து கொண்டிருந்தார்கள். விரைவிலே அவர்களுக்குத் திருமணம் செய்யப் போவதாகவும் டாக்துரை சொல்லிக் கொண்டிருந்தார். திடீரென்று அந்த ஜோசப்புக்கு சென்னையிலே வேலை கிடைத்துவிட்டது. சென்னையிலே உள்ள அவனது பெற்றோர்கள், "நல்ல வேலை இது! நழுவவிடக்கூடாது! உடனே வா!" என்று அவசரக் கடிதம் போட்டுவிட்டார்கள். ஜோசப் தன் காதலி மேரியிடம் பிரியாவிடை பெற்றுக் கொண்டு, விரைவில் திரும்பிவந்து விவாகத்தை முடித்துக் கொள்கிறேன் என்று கூறிவிட்டு, சென்னை போய் சேர்ந்தான். ஜோசப் சென்னைக்குச் செல்லும் அந்த சமயத்தில் எல்லாம், என் பெற்றோர்கள் டாக் துரையின் வீட்டில்தான் வேலை செய்து கொண்டிருந்திருக்கிறார்கள். அம்மா, கர்ப்பவதியாக கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள் என்றேனே; அது அப்போதுதான்! காதலன் சென்னைக்குச் சென்று விட்ட நாலைந்துநாளைக்கெல்லாம், எங்கள் குடும்பத்திலே புயல் வீசச் செய்த சம்பவத்திற்கு, மேரி கதாநாயகியானாள்.

மேரி, தன்னையே உயிராகப் பாவிக்கிறாள் என்று பெருமூச்சுவிட்டுக் கொண்டு, சென்னையிலே இருக்கிறான் ஜோசப்.

ஆனால், இவளோ—இங்கு தன் தகப்பனைப்போல காம வேட்டைக்கு கனை தொடுக்கப் புறப்பட்டுவிட்டாள். அப்பாவைப் போலவே பெண்ணும் என்ற பெயரை எடுக்க வேண்டுமென்பதிலே அவளுக்கு அவ்வளவு ஆசை! அவள் ஆசையின் விளைவு, எங்கள் குடும்பத்திலே எத்துணை கொந்தளிப்பை உண்டு பண்ணிவிடும் என்பதை அவள் கண்டாளா?—ஒருநாள் மாலை தேயிலைத் தோட்டத்து வேலை முடிந்து, பாட்டி வீட்டுக்கு வந்து விட்டார்கள் என்னைப் பராமரிக்க; அப்பாவும், அம்மாவும் துரையின் வீட்டு வேலைகளைக் கவனிக்கச் சென்றிருக்கிறார்கள். அப்பா, நந்தவனத்திலேயுள்ள மலர் செடிகளை சீர்படுத்திக் கொண்டிருந்திருக்கிறார். அம்மா, பாத்திரங்களைத் துலக்கிக் கொண்டிருந்திருக்கிறார்கள். அப்போது மேரி, என் தந்தையின் பக்கம் வந்திருக்கிறாள். அப்பா, "என்னம்மா சௌக்யமா?" என்று வழக்கம் போலக் கேட்டிருக்கிறார். உளறிக்குளறித் தமிழைப் பேசும் அவளும்—"சௌக்கந்தான்" என்று கூறிவிட்டு "குமார வடிவு—என் பெட் ரூமிலேயிருக்கிற லைட்டை ஏற்றிக் குடு!—எனக்கு லைட்டை ஏற்றத் தெரியிலே" என்று கூப்பிட்டிருக்கிறாள். அப்பாவும் சாதாரணமாக நினைத்து, அவளது படுக்கையறைக்குப் போய் அங்குள்ள விளக்கை எடுத்து ஏற்ற முயற்சி செய்திருக்கிறார். திடீரென்று மேரி. அந்த அறையின் திரைச் சீலையை இழுத்துவிட்டு, அப்பாவிடம் நெருங்கியிருக்கிறாள். அப்பாவுக்கு ஒன்றும் புரியவில்லை. "என்னம்மா—" என்று கேட்டபடி அசைவற்று நின்று விட்டார் அவர். "ஒண்ணுமில்லே—ஒன்மேல எனக்கு ரொம்ப லவ்வு!"

"என்னது—லவ்வா?"

"ஆமா — லவ்வுன்னா தெரியாது—காதல்—காதல்" என்று அவள் விளக்கமும் கொடுத்து நின்றாள்.

"காதலா? அடகர்மமே — என்மீதா-நான் பிள்ளைகுட்டிக்காரன் அம்மா!"

"பிள்ளையிருந்தா என்னே — உனக்கு நாப்பது வயிசு இருக்கும்—இருந்தாலும் 'யங்'-காத்தானே இருக்கே — எனக்கு ரொம்ப லவ்வு உன்மேல!"

10-ம் பக்கம் பார்க்க

வெளியே சொன்னால் வெட்கம்!

[சுழல் விளக்கு]

யாரோ என்ன பெயரோ?

ஆங்கிலம் தெரியாததுபெரிய குறைதான்! அதுவும் அரசியலில் புகுந்திருக்கிறவர்களுக்கு ஆங்கிலம் 'பூஜ்ய'மென்றால் அதனால்அவர்களுக்கு ஏற்படுகிற மனநோயைத் தீர்ப்பதற்கே வேலை சரியாக இருக்கும். கதவை மூடிக் கொண்டு 'நெட்டுரு'ப்போடுவார்கள் ஒரு சிலர். பெரிய பெரிய ஆங்கில மேதைகளை வைத்து பாலபாடம் (ஏ,பி,சி,டி) சொல்லிக் கொள்ளுகிறவர்களும் இல்லாமலில்லை. காங்கிரஸ் எம். எல். ஏ. க்கள் தங்கியிருக்கிற வட்டாரங்களுக்குப் போய்ப் பார்த்தால் இது மாதிரி நாடகங்களை காசில்லாமலே பார்த்துவிட்டு வரலாம், இதையெல்லாம் ஏன் சொல்லுகிறேன் தெரியுமா? ஆவடியிலே நடக்கப் போகிற காங்கிரஸ் மாநாடே இந்த 'எழவு' ஆங்கிலத்திலே தான் பின்னிக் கொண்டு இருக்கிறது. மாநாட்டுத் தலைவரைத் தவிர எல்லாம் தயாராகிவிட்டது. ஆமாம்; ஹவுஸ் புல்! மாநாட்டுத்தலைவர் யார் என்கிற பிரச்சினைதான் இப்போது பெருங்குழப்பம்! தியாகராசரி'லிருந்து திருவண்ணாமலையார் வரைக்கும் ஆளுக்கொரு 'சீட்' கிடைத்து விட்டது.

எங்கள் தலைவர் காமராசர் தான் மாநாட்டுத் தலைவராக இருக்கவேண்டுமென்றுமதுரை கிருஷ்ணமூர்த்தி 'ஆலாபனை' செய்கிறாராம்! பாகனேரி சாமிநாதன் அதற்கு 'ஆமாம்' போடுகிறாராம்! ஆனால் காமராசரோ, தலைவராகிவிட்டால் அந்தக் கோடிக் கணக்கானவர் கூட்டத்தில் யாரால் ஆங்கிலத்தில் பேசமுடியும் என்று அஞ்சுகிறாராம்! ஆச்சாரியார் கோஷ்டி சும்மாயிருக்குமா என்ன? 'எங்கள் ராஜாஜிதான் மாநாட்டுத் தலைவராக வரணும்' என்று கூட கத்துகிறார்களாம்' டி. டி. கிருஷ்ணமாச்சாரி தான் விலகப் போவதாக டில்லியிலே விட்ட 'புஸ்வாணத்'திற்கும் 'ஆவடி'க்கும் சம்மந்த இருப்பதாகக் கூட கேள்வி! வரதராஜுலுநாயுடு, சாத்தூர் ராமசாமிநாயுடு, இவர்களுக்கு சீட்டு விழுமா என்றால், ஒரு சில 'சகுனி'கள் அடுக்குமா, அது தகுமா, முறையா, என்கிறார்களாம்! ஆங்கிலத்தின் அச்சரமே தனக்குத் தெரியா விட்டாலும் படித்தவர் வரக் கூடாதாம்! ஏனென்றால் அவர் தன்னோடு ஒன்றாகக்கூடி குலவி இருந்தவராயிற்றே அவருக்கா இந்தப் பெரிய பதவி என்ற நல்லெண்ணம் !, பரந்த நோக்கம்! இதெல்லாம் காலவினை! ,

★ ★ ★

ஐயோ, பாவம்!

காங்கிரஸிலே தான் 'கலாட்டா' என்று பார்த்தால், 'நான் ஏன் காங்கிரசை விட்டு விலகினேன் தெரியுமா?' என்று சுவரொட்டியிலே போட்டுக் கொண்டு பேசுகிற தமிழ் தலைவர்கள் கூடவா இப்படி நடந்து கொள்ள வேண்டும்? 'காங்கிரசை விட்டுப்போ இல்லாட்டா உன் வேஷத்தை கலை' என்றது காங்கிரஸ் மேலிடம். தலைவர் அதிகலாபம் தருகிற தட்டில் உட்கார்ந்து கொண்டார்—இது ஊர் உலகம் அறிந்த பகிரங்க ரகசியம்! இதை போஸ்டரிலே போடுவதே அசிங்கம்! அதோடு நிற்காமல் வேலூர் போய் 'என்னப்பா தமிழ்மகனே. வேலூர் பெரிய நகரமாச்சு! நாம் ஏன் மாநாடு நடத்தப்படாது? தி. மு. க, மாநாடு நடந்தது, அடுத்து அவர்கள் வந்து, வந்து பேசிப் போகிறார்கள். நீங்களெல்லாம் தூங்கிக் கொண்டே இருந்தால் தமிழ்நாடு தமிழருக்காவது எப்போ தப்பா?"—தமிழ் தலைவர் கேட்டாராம். அந்த இளைஞர் கொஞ்சம் துணிச்சல்காரர்! "என்ன தலைவரே அவர்கள் கூட்டம் போட்டா ஆயிரக் கணக்கில் கூட்டம் கூடுகிறார்கள். நமக்கு அப்படியில்லையே" என்றாராம் "நாடகம் போட்டால் போகிறது?"—இது தலைவர்.

"என்ன சிலப்பதிகாரம் தானே சொல்லுகிறீர்கள்—வேண்டாம் தலைவரே வேண்டாம்! நாம் கூட்டம் கூட்டாமல், நாடகம், நடத்தாமல் இருப்பதே நல்லது, ஏனென்றால்—நாடகத்தை நடத்தி, நமக்கு துளி அளவு கூட ஆதரவு இல்லை என்பதை ஏன் கூட்டிக் கொள்ள வேண்டும்' என்று இடித்துக் காட்டினாராம். தலைவர் ஒன்றும் பேசாமல் 'பஸ் ஸ்டாண்டு' எங்கே இருக்கிறது தமிழ்மகனே!' என்றாராம், வேறு என்ன சொல்லுவார் பாவம்! அது மட்டுமா? வேலூர் படலத்தோடு தலைவர் நிறுத்திக் கொள்ள வில்லை. மதுரை தியாகராசர் கல்லூரிக்கு தாக்க கடிதமெழுதினாராம்! தமிழ் வளர்க்கும் கல்லூரியில் தமிழ் தலைவனாகிய என்னை ஒரு முறை கூட அழைக்க மாட்டீர்களா என்று கேட்டாராம்! மதுரை மாணவர்கள் சாமான்யர்களா என்ன! 'பார்ப்போம்' போட்டார்களாம்! அதற்குப் பிறகு இரண்டு மூன்று சிறப்புக் கூட்டங்கள் நடந்து விட்டதாகக் கேள்வி! அப்போது கூட தமிழ் தலைவர் மாணவர்கள் நினைவிற்கு வராதது வருந்தத் தக்கது!

சித்தம் எப்படியோ?

மேயர் தேர்தலிலே எவ்வளவு 'பொம்மலாட்டம்' நடந்திருக்கிறது தெரியுமா? சிதம்பரம் செட்டியாருக்கு 'யோகவான் யோகப்பிரைஸ்' அல்லவா அடித்திருக்கிறது! தேர்தலுக்கு முதல்நாள் வரை அடிபட்டுக் கொண்டிருந்த பெயர் வேறு, தேர்தலில் மேயரானவர் வேறு! கல்வித் திட்ட நம்பிக்கைத் தீர்மான வாக்கெடுப்பின்போது ராமமூர்த்தி செய்த கைங்கர்யத்தை, கார்ப்பரேஷன் கவுன்சிலர்கூட ஒருவர் செய்திருக்கிறார். அதனாலே அவருக்கு உண்மையிலேயே அதிக லாபமென்றுதான் சொல்லிக்கொள்ளப் படுகிறது. யுத்தத்திற்குப் பின் பணக்காரரானவர்—மச்சு வீடு கட்டியவர். அவருக்கு சிதம்பரம் செட்டியாருடைய 'கைமாறு' ஏதோ இன்னும் பாக்கியிருக்கிறது. இல்லா விட்டால் மேயர் பதவியையே உதறித் தள்ளுவாரா? இந்த ரகசிய ஒப்பந்தத்தை திறமையாக முடித்த காங்கிரஸ் ராதா கிருஷ்ண பிள்ளையை சிதம்பரம் செட்டியாரின் கடைக்கண் அடிக்கடி தொட்டு வருகின்றனவாம்! என்ன காலத்திற்கோ!

★ ★ ★

போர்! காவிக்கும் கமண்டலத்திற்கும்போர்!

பதவிச் சண்டையும் படுமோசக்காரர்களும்தான் அரசியலை நாற்றமெடுக்கச் செய்து விட்டார்கள் என்று பார்த்தால் பக்தர்களுக்குள்ளே வேறு பெரிய 'லடாய்!' "அவனுக்கு பைத்தியமில்லை! பாவை மோகம்! இல்லாவிட்டால் அவனைப் பற்றி பத்திரிகைகளிலெல்லாம் எழுதுவார்களா? நான் விசாரித்த மட்டில் அன்னவன் படுமோசக்காரன் என்றே சொல்லுகிறார்கள் அடியார்கள்!" என்று வாரியார் மாம்பலத்திலே பெரியவர்கள் வீட்டில் சொல்லி வருகிறாராம்! ஐயோ பக்தர்களுக்குள்ளேயே அடிதடி!

இரண்டு வாரத்திற்கு முன்னாடி சூளை வட்டாரத்தில் அந்த வாரியாரின் வைரி பேசினாராம். அப்போது அவர் 'விபூதி பூசுகிறவனை நம்பாதே! அவன் நஞ்சு! மொட்டை அடித்தவர்கள் மோசக்காரர்கள்' என்று வாரியாரை ஜாடையாக 'அட்டாக்' பண்ணினாராம் உள்விஷயம் இன்னும் புலனாகவில்லை.

ஆனால் ஒருவராலே ஒருவருக்கு 'வருமானக் 'கட்டை' ஏற்பட்டு விட்டதாகவும் சொல்லப்படுகிறது. தகராறுக்கு இதுவா மூலகாரணம்? வேறு என்னவோ? எல்லாம் பெரிய புராணத்திற்குத்தான் வெளிச்சம்!

★

'அன்னை' சாரதாமணி தேவியின் பெருமைகள்!

கிருகஸ்தர்களான சிஷ்யர்களில் ஒருவருடைய இளம் மனைவியை மட்டும் மாடிக்கு அழைத்துப் போய் அவளுக்குப் பல தின்பண்டங்களை அன்னை ரகசியமாகக் கொடுப்பாளாம். அப்போது, "இதோ பார்; இதை மற்றவர்களிடம் சொல்லி விடாதே ! சொன்னால் பொறாமை கொள்ளப் போகிறார்கள்" என்பாளாம்.

★

பள்ளிக்கூட வாத்தியாரான வாலிபன் ஒருவன் ஒரு நாள் இருபத்தைந்து மைல் தூரம் கடந்து வந்து அன்னையைத் தரிசித்தான். இந்த சிரமத்தை அறிந்த அன்னை அவனுக்கு அரைமணி நேரம் விசிறிக் களை தீர்த்துப் பெரிய விருந்து செய்வித்தாள். அவன் விடை பெற்றுச் செல்லும் போது, ஊர் எல்லை வரைக்கும் அவனுக்குத் துணையாகச் சென்று, வழியனுப்பி, வயல்களுக்கிடையே அவன் தலை மறையு மட்டும் சுமார் ஒரு மணி நேரம் நின்று கொண்டிருந்து விட்டுப் பிறகு தான் திரும்பினாள் !

★

இன்னொரு சமயம் யாரோ ஒரு சிஷ்யன், "தாயே! தாங்கள் காளி மாதாவைப்போல் இருக்கிறீர்கள்" என்றான். "இந்தா அப்படிச் சொல்லாதே! நீ சொல்லுவது உண்மையானால், நான் சதா காலமும் இப்படி அல்லவோ நிற்க வேண்டும்" என்று சொல்லி, வாயைப் பிளந்து கொண்டு நாக்கை வெளியே நீட்டியபடி அன்னை சிறிது நேரம் சிலையாய் நின்றாள்.

★

சாரதாமணியின் உள்ளம் பண் பட்ட உணர்ச்சிகள் நிறைந்தது என்று காட்ட இவைபோல் இன்னும் பல சம்பவங்கள் சொல்லுகிறார்கள்.



வண்டிக்காரன்

[ஆரூர் 'அமிர்தம்']

புலியூரிலிருந்து பைங்காடு செல்லும் பாதை—கரடு முரடான பாதை.

அந்தப் பாதையில் சென்று கொண்டிருந்தது ஒரு மாட்டு வண்டி. அது நிறைய மூட்டை மூட்டையாகச் சாமான்கள்,—அந்த மூட்டைகளுக்கு 'நானும் சளைத்தவரல்ல' (உருவத்தில்) என்று சொல்லுவதைப் போல ஒரு பெரிய மனிதர்.

வண்டியை ஓட்டிக் கொண்டு சென்றவன் ஒரு பையன். இந்தச் சின்ன வயதிலேயே வண்டியோட்டும் நிலை அவனுக்கு ஏன் வந்தது? சரியான கேள்வி; தெளிவான பதிலும் உண்டு! மணி — அவன்தான் அந்தத் தம்பி-ஒரு ஏழை!

அந்த ஏழைத்தம்பி தன் முதலாளியையும்—அந்த மூட்டைகளையும் வைத்து வண்டியோட்டிச் செல்வது பைங்காட்டுக்கு. அன்று அங்கு சந்தை! அந்தச் சந்தையில் விற்பனையாக வேண்டியவை அந்த மூட்டைகள். புரிந்திருக்கலாம்; அவனது முதலாளி ஒரு வியாபாரி.

வண்டியை 'ஜல் ஜல்' என்று ஓட்டிக்கொண்டு போனுன மணி ஆனால்அவனுக்கு எப்படித் தெரியும் அன்றைக்கு பெரியதொரு விபரீதம் நடக்க இருப்பது!

பைங்காடு வந்தது. சந்தைக்குள் சென்று விட்டான் மணி. வியாபாரத்தில் மும்முரமாக ஈடுபட்டு விட்டார் முதலாளி. மணியோ வண்டியை ஒரு மூலையில் அவிழ்த்து விட்டான். வண்டிக்குள்ளேயே படுத்தும் விட்டான். அவ்வளவு களைப்பு! மறுபடி அவன் கண் விழித்துப் பார்த்தபோதுதான் திடுக்கிட்டு விட்டான். 'ஐயோ' என்று அலறியும் விட்டான். காரணம்? பக்கத்தில் கட்டியிருந்த வண்டிமாட்டைக் காணவில்லை!

சந்தைச் சந்தடியில் சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த திருடனின் சொந்த பொருளாகி விட்டது மாடு! மணியின் உடல் நடுங்கியது. உள்ளம் துடித்தது. தூக்கம் அவனுக்கு பெரும் துக்கத்தையல்லவா தந்து விட்டது!

செய்தி முதலாளிக்கு எட்டி விட்டது. அவர் புலியாக மாறி விட்டார். அப்புறமென்ன? மணியின் பிஞ்சு உடல் அடிகளையும் உதைகளையும் தாங்க முடியாமல் தத்தளித்தது!

சந்தை முடிந்தது. முதலாளி சொந்த ஊர் திரும்பிக் கொண்டிருந்தார். இப்போது அவரது காணமல் போன மாடு இருக்க வேண்டிய இடத்தில் மணி தோன்றினன். இரக்கமற்ற அந்த மனித மிருகத்தை வைத்து அவன்தான் இழுத்துக் கொண்டுவந்தான். அவனால் ஏற்பட்ட நஷ்டத்தை அவன்தானே அடைக்க வேண்டும்? இனி, அவனுக்கு அந்தத் தண்டனைதான்.

★ ★ ★

ஒரு நாள்—

முதலாளி சந்தைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். மணி மூட்டைகள் எல்லாவற்றையும் வண்டியில் ஏற்றியபடி இருந்தான்.

பசி அவன் வயிற்றைக் கிள்ளியது. அவன் அன்று சாப்பிடவில்லை. அவனுக்கு சாப்பாடு போடவில்லை முதலாளியின் மனைவி. எச்சல் கையை சுத்தமாகத் துடைத்து விட்டு காக்கையை ஓட்டக் கூடிய அந்த 'தர்மகர்த்தா' இம்மாதிரி பல முறை மணியை 'மறந்திருக்கிறார்'. அதே கதைதான் அன்றும். மணி பட்டினி!

மூட்டைகள் முழுதும் ஏற்றப் பட்டு விட்டன. கடைசியில் முதலாளியும் ஏறிக் கொண்டார். பட்டினி வதைக்க பைங்காட்டை நோக்கி வண்டியை இழுத்துக் கொண்டிருந்தான் மணி. அவன் மனம் ஆத்திரத்தால் கொதித்தது. ஆனல், அவனல் என்ன செய்ய முடியும்?

அன்று மாலை—

சந்தை முடிந்துவிட்டது. வண்டி திரும்பி வந்து கொண்டிருந்தது.

பசி ஒரு பக்கம்—பாழும் களைப்பு ஒரு பக்கம்—இந்நிலையில் தள்ளாடித் தடுமாறி தன் கடமையைச் செய்து கொண்டு வந்தான் மணி. அவன் நெஞ்சத்தில் ஒரே கவலை! இரக்கமற்ற முதலாளியை நோவதா?-தன்னை வாட்டி வதைக்கும் ஏழ்மையை நோவதா?—என்ற வேதனையான எண்ணங்களுடன் அந்தப் பாலகன் வண்டியை இழுத்துக் கொண்டு வந்தான்.

அதே சமயம்—

தடுமாறியபடியே வந்து கொண்டிருந்த அவனதுவண்டி, தெருவின் ஓரத்தில் இருந்த ஒரு பெரிய மரத்தின் வேரில் மோதியது. நிலை தடுமாறியது. அதன் வேகத்தை அடக்க முடியவில்லை மணியால். மறுகணம் வண்டிசாய்ந்தது. 'ஐயோ' என்ற அலறலுடன் இருவரும் வண்டியின் பக்கத்திலிருந்த பள்ளத்தில் விழுந்தனர். உருண்டனர்.

மணி மயக்கமுற்றான்.

மறுபடியும் கண்விழித்துப் பார்த்தபோது அவன் நடுங்கினன். உடலெல்லாம் காயங்கள்! முதலாளியும் நன்றாக அடிபட்டு நினைவற்று கிடந்தார்.

அந்த இரக்கமற்ற அரக்கன் அழிந்து தொலையட்டும் என்று அங்கிருந்து அகன்று விடவில்லை மணி. அவனது இளகிய மனம் அப்படிசெய்ய ஏனோமறுத்தது.

உடனே, அவன் தனது முழு பலத்தையும் திரட்டிக் கொண்டான். வண்டியை நிமிர்த்தினன். முதலாளியை வண்டியில் தூக்கிப் போட்டான்-வண்டியை இழுத்துக் கொண்டு நடந்தான்.

● 12-ம் பக்கம் பார்க்க

(முத்துவும் செல்வியும்)

9. சூடதீபம் கையைச் சுட்டது!

''வருகிறேன்; வருகிறேன்'' என்று பயமுறுத்திக் கொண்டிருந்த அரை ஆண்டுப் பரீட்சை வந்தே விட்டது. பிள்ளைகள் இருக்கிற வீடுகளிலெல்லாம் 'ரசுளை'—ரேடியோக்களுக் கெல்லாம் ஓய்வு! ஆமாம்; அந்தக் குழப்பத்தில் எந்த நிகழ்ச்சியை யார் நிம்மதியாகக் கேட்க முடியும்? ப-ட-ம்—படம்; ப-ட்-ட-ம்—பட்டம்; என்று எழுத்துக் கூட்டிப் படிக்கும் கூச்சல்தான் வீடெல்லாம் தினம்!

செல்வியைத்தான் உங்களுக்குத் தெரியுமே! சுட்டிப் பெண்—ஆனாலும் கெட்டிக்காரி-பரீட்சையைப் பற்றி அதற்கு கவலையே கிடையாது.

ஆனல் முத்துவுக்கோ பயம். எவ்வளவு விழுந்து விழுந்து படித்தும் அவனுக்கு அடிவயிற்றில் என்னவோ செய்து கொண்டுதான் இருந்தது. செல்விக்கு காலையில் பரீட்சை—முத்துவுக்கு மாலையில்—இப்படி பள்ளி அதிகாரியின் ஏற்பாடு.

செல்வி பள்ளிக்குப் புறப்பட்டது. பாட்டி குறுக்கிட்டு, ''ஏண்டி, சாமியைக் கும்பிடாமல் போறியே-உனக்காக சூடம் வாங்கி வச்சிருக்கேன்.'' என்று சொன்னர்கள். செல்வியை சாமி அறைக்குள் அழைத்துப் போனர்கள். சூடமேற்றி. செல்வியை அதைத் தொட்டு கண்ணில் ஒத்திக் கொள்ளச் செய்து அனுப்பினர்கள். அதையெல்லாம் முத்துப் பயல் கதவு இடுக்கிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தான்!

செல்வி பரீட்சை முடிந்து ஓடிவந்தது. ''எனக்கு நூற்றுக்குத் தொண்ணூறு 'மார்க்' பாட்டி'' என்ற நல்ல செய்தியையும் சொன்னது. பாட்டிக்கு கொள்ளை மகிழ்ச்சி! ''அடபயலே முத்து, பாத்தியாடா செல்வியை! தொண்ணூறு வாங்கிட்டாடா'' என்று கத்திக் கொண்டே வீட்டுக்குள் போனர்கள். முத்துவைக்காணோம். அப்பாவின் அறை, அம்மாவின் அறை, அத்தானுடைய தனி அறை, சாப்பாட்டு நாற்காலியின் இடுக்கு—தேடாத இடமில்லை. திடீரென்று 'அப்யோ! அம்மா! அப்பா, ஆத்தா' என்று கூச்சல் கேட்டது. பாட்டி திடுக்கிட்டுப் போய் சாமி அறைக்குள் ஓடினர்கள். முத்துதான் கத்தினன். அவன் கைவிரல்கள் வெந்து போயிருந்தன. தீபஆராதனைக் கரண்டியில் சூடம் எரிந்து கொண்டிருந்தது. முத்து வேதனை பொறுக்க முடியாமல் கத்தினன். ''என்னடா விஷயம்'' என்று கேட்டால், ''நான் சரியாகவே படிக்கவில்லே; செல்வி சூடத்தை தொட்டுக் கும்பிட்டதாலேயே தொண்ணூறு மார்க் வாங்கியிருக்குதே நெருப்பிலே கையையே வச்சுட்டா நூறு மார்க்கும் வாங்கிடலாம்னு நெனெச்சு சூடத்தை ஏற்றி கையை வைச்சுட்டேன்'' என்றான். வருத்தத்தையும் முந்திக் கொண்டு சிரிப்பு வந்து விட்டது பாட்டிக்கு.

புதையல்.........

○ 7-ம் பக்கத் தொடர்ச்சி

"அடடா — வேலைக்காரன் கிட்டே..."

"அது எனக்கு ஒரு டேஸ்ட்!"

"டேஸ்டாவது — மண்ணுங் கட்டியாது — அம்மா — மேரியம்மா–சொல்வதைக் கேளுங்க —உங்க காதலன் ஜோசப்புக்கு துரோகம் பணறுதிங்க—அது பாவம்"

"துரோகமா–ஜோசப் மேலயும் எனக்கு லவ்தான் — உன் மேலயும் எனக்கு லவ்தான்! ஒருநாளைக்கி, ஹோட்டல் சாப்பாடு சாப்பிட்டா, வீட்டு சாப்பாட்டுக்கு துரோகமா? வீட்டு சாப்பாடு இல்லேன்னு, ஹோட்டல் சாப்பாடு சாப்பிடக்கூடாதா? வாட் ஈஸ் தீஸ்! நான்சன்ஸ்!"

இந்த உரையாடல்களை அப்பா, தன் டைரியிலே அப்படியே எழுதியிருக்கிறார்—பொழுது போகாத நேரங்களில் நான் இந்தக் கட்டத்தைப் படித்துப் படித்து மனப்பாடமே செய்து விட்டேன் — பிறகு கதையைக் கேளுங்கள்.

அப்பா, மேரிக்கு எவ்வளவோ புத்திமதிகளை எடுத்துச் சொல்லியும் அவள் கேட்பதாயில்லை. அவளது காமப் பசியின் முன்னே கற்பைப் பற்றிய உபதேசங்கள் எம்மாத்திரம்?

"அம்மா மேரி! சொல்வதைக்கேள்—காதல் என்பது ஒரு ஜீவனுள்ள எழுத்துக் கோர்வை, அதை இப்படிப் புழுதியில் எறியாதே! உங்கள் ஆங்கிலத்து நூல்களிலே அரும் பெரும் காதல் இலக்கியங்கள் உண்டாம்—ரோமியோ ஜூலியட் என்ற காதல் மகா காவியத்தை கேள்விப் பட்டிருக்கிறேன்—அப்படி நடந்திருக்குமா ஒருகதை என்று சந்தேகமும் பட்டிருக்கிறேன், அவ்வளவு புனிதமான காதல் கதை நிகழ்ந்திருக்க முடியாது என்பதற்கு, நீ ஒரு எடுத்துக் காட்டாய் இருக்கிறாய்!" என்று மேரியிடம் சொன்னேன். அதற்கு மேரி, "அப்படியா—ரோமியோ ஜூலியட் கதை தெரியுமா? தெரிந்தும் என்னை ஏமாத்துறயே— எங்கே, ஒரு முத்தம் கொடு!— கமான்! மைடீயர்! ரோமியோ ஜூலியட் எல்லாம் நடக்க முடியாத ஸ்டோரிகள்! கிளியோபாட்ரா கேள்விப் பட்டியா நீ? சீசர், ஆண்டனி என்ற இரண்டு லவ்வர்கள் அவளுக்கு!—அவளைப்போலத் தான் எனக்கும், ஜோசப் — சீசர்! நீ ஆண்டனி!" என்று புலம்பினாள் அந்த வெள்ளைப் பெண்.

இவள் கிளியோபாட்ராவையும் மிஞ்சக்கூடிய பாஞ்சாலியாக இருப்பாள் போலிருக்கிறதே என்று அஞ்சியவாறு, அந்த அறையைவிட்டு வெளியே நகர ஆரம்பித்தேன்.

"ஊ ஹூம் — போகாதே மேன்! போனா, எங்கபாதரிடம் சொல்லி, நீ என்னை லவ் பண்ணினதா சொல்லி, வேலைக்கு சீட்டு கிழிச்சுடுவேன்!" என்று கோபித்தாள் அவள்.

நான் மீண்டும் புத்தி சொல்ல அவளைப் பார்த்தேன்- அவள் அதற்கு வாய்ப்பு தராமலே என் மீது தாவிப் பாய்ந்து என்னைக் கட்டிக் கொண்டாள். அவளிடமிருந்து என்னால் விடுபடவே முடியவில்லை. வெறிநாய் போல என் கன்னத்தைப் புண்ணாக்கி விட்டாள்—ஓங்கிஅடித்துஅவளைத் தரையிலே தள்ளிவிடத் தீர்மானித்து அதற்காக முயன்றேன்- ஆனால் அந்த சமயத்திலே தான் என் மனைவி, வள்ளியம்மாள் அறைக்குள்ளே நுழைந்தாள்-இல்லை-என் வாழ்விலே புயல் நுழைந்தாள்"

இது போலத்தான் அப்பா, அந்த சம்பவத்தை வர்ணித்திருக்கிறார். அம்மா, உள்ளே வந்ததும் - மேரி, அப்பாவை விட்டு விட்டு வேளியே ஓடி விட்டாள். அப்பா, அம்மாவைப் பார்த்து "வள்ளி!" என்று அழைப்பதற்குள், அம்மா கோபத்தோடு - "போதும்-நம் உறவு இன்றோடு முடிந்தது!" என்று சொல்லிக் கொண்டே அதை விட்டு வெளியேறி விட்டார்கள்.

இந்த சம்பவமும், அம்மாவின் கொலைக்கான சூழ்நிலைகளுக்கு ஒரு அடிப்படையாக அமைந்தது-

அப்பா கொலைகாரர் அல்ல என்று நிருபிக்க எங்கெங்கோ சுற்றி வளைக்கிறாயே; சுருக்கமாகச் சொல்லி விடேன் என்று கேட்கிறீர்களா? - அல்லது, தொடர்கதைஎழுதும் ஆசிரியர்களைப் போல, சம்பவங்களை முக்கிய இடத்தில் நிறுத்தி ஆவலைக் கிளப்புகிறானே; என்று கிண்டல் செய்கிறீர்களா? – பெரியவரே! அப்படியெல்லாம் தவருக நினைக்காதீர்கள்-

என் கதையையும் - என் குடும்பக் கதையும் விளக்கமாகச் சொன்னால் தான் என்னைப் பற்றி நீங்கள் கொண்டிருக்கிற அலட்சியம் நீங்கும் - என் மீது அனுதாபம் பிறக்கும் தங்களுக்கு! அதனால் பொறுமையோடு என் கதையை நீங்கள் கேட்டுத் தான் தீர வேண்டும்.

[வளரும்]

தமிழ் நெஞ்சம்........

★ 2-பக்கத் தொடர்ச்சி

புரட்சிபூத்து அதனால் விடுதலைக் கனி கனிந்த நாடுகளிலெல்லாம், கட்சியின் பெயரால், அந்தக் கட்சிக்குத் தான் செய்திருக்கும் தியாகததின் பெயரால் பதவிக்கு வந்தவர்கள் அவரவர்கள் ஆசைக்கு ஏற்றபடி கல்வி முறைகளை மாற்றியதாக நாம் கேள்விப்பட்டதில்லை. இன்னும் சொன்னால், மேலை நாடுகளிலே ஆளும் கட்சி மாறினாலும் கல்வித் திட்டம் மாறியது கிடையாது. இந்த நாட்டிலே தான் பீடமேறியவர்க்கு ஒரு திட்டம் என்ற நிலை இருக்கிறது! அங்கஹீனமான பாரத மாதாவுக்கே இது அடுக்குமா என்பதே சந்தேகம் தான்.

இப்போதுநியமிக்கப்பட்டிருக்கும் டாக்டர் அழகப்பா புதிய கல்வித் திட்ட எதிர்ப்பின்போது கண்மூடி மௌனியாக இருந்தவர்-சென்னை சர்வகலாசாலை பட்டமளிப்பு விழாவின் போது சமுதாயம் கீழ்நிலையிலிருக்கிறது என்ற கண்துடைப்புக்காக சொல்லி, ஏன் சமுதாயம் அமிழ்த்தப்பட்டு விட்டது -- அதற்கு மூலகாரணமென்ன என்று சொல்லாமல், மனச்சாட்சியை கொன்றவர் அவர் புதிய குழுவின் தலைவர்! மற்றவர்கள் 'யாமறியோம் பராபரமே' என்றவர்கள். தீர்ப்பின் சாயல் நமக்கு இப்போதே தென்பட்டு விட்டது.

இந்த நாட்டில் கல்வியின் வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டவர்கள் — இன்னும் அதற்கான கஷ்ட நஷ்டங்களை அனுபவிப்பவர்கள் கிறிஸ்துவர்கள் தான்–அவர்களுக்கு கல்வித் திட்ட ஆய்வுக்குழுவிலே இடமளிக்கப் படவில்லை. வேற்று மதக்காரர்கள் என்பதற்காக இந்த மதசார்பற்ற (!) சர்க்கார் ஒதுக்கி வைத்திருப்பார்கள்' கேட்க நாதியில்லை என்ன 'இட்லரிச'த்தால்! 'தானே கற்றவர், மற்றவர் அது அற்றவர்' என்று ஆணவ முரசொலித்தவர்களெல்லாம் அடைந்த கதியை சட்டப் புத்தகம் காண்பிக்கா விட்டாலும் சரித்திரம் காண்பித்திருக்கும். இதை சர்வாதிகாரத்தின் காதலர்கள் எண்ணிப் பார்த்திடல் நலம்! ஆனால் ஒன்று, மக்களின் 'மறுமலர்ச்சி' எண்ணத்தை மாய்த்து மீண்டும் ஆஸ்ரம வாழ்வுக்கு இழுத்துச் செல்லும் எந்த அரக்கத்தனத்தையும் நாடு விட்டு வைக்காது- அந்தக் காலம் மலையேறி விட்டது. மறைந்திருந்த வாலியை மாய்த்த ஆரியதர்மத்(!)தை கல்வியமைச்சரும் பின்பற்றுகிறார் போலும்! தமிழ் நெஞ்சமாக இருந்தால் ஆச்சாரியார் திட்டத்தையே முலாம்பூசி அமுலாக்க முனைவாரா?

●

புட்ரசிப்..............

(5-ம் பக்க தொடர்ச்சி)

திரை, ஓரே வெளுப்பாயிருந்தது!-சிலவினடிகள் அப்படியேயிருந்தது. பிறகு, கீழ்க்காணும் எழுத்துக்கள் உருண்டு வந்தன.

"படம் — முற்றிற்று - வணக்கம்"

மக்கள் திகைத்தனர், தியேட்டரில் மணி அடிக்கப்பட்டது - திரைகள் இழுக்கப்பட்டன - தியேட்டரில் ஓரே புரட்சி — மக்கள், பரமசிவானந்தத்தை சூழ்ந்துகொண்டனர்.

"என்ன அக்கிரமம்?" என்று கத்தினர்.

"எல்லாம் சென்சார் வேலை" என்றார் அவர்.

"சென்சார் இரண்டு இடத்தில்தானே அய்யா வெட்டியதாகச் சொன்னார்கள்?"

"ஆமாம் தோழர்களே! சென்சார் இரண்டே இடத்தில் தான் வெட்டினார்கள்!

முதல் இடம்: டைட்டில் முடிந்ததும் வெட்டினார்கள்.

இரண்டாவது இடம்: 'வணக்கம்' என்பதற்கு முதல் பிரேமில் வெட்டிவிட்டார்கள் – ஆக இரண்டே இடம்தான்!" என்று பட முதலாளி பதில் சொன்னார் - மக்கள் வெள்ளம் "சென்சார் ஆபீஸ்" இருந்த திசையை நோக்கி, ஒரு ஆத்திரப் பார்வையை வீசிற்று!

★

கோகேல்.........

11-ம் பக்கத் தொடர்ச்சி

அறிஞன் அவனது புலமைக்கு பெருமதிப்பு தருகிறான், "நாங்கள் எல்லாம் கோகேலின் 'மேலங்கி'யிலிருந்து பிறந்தவர்கள்" என்று.

✶

அந்தப் புகழுரைக்குப் பாத்திரமான 'மேலங்கி' என்ற கதை கோகேலின் உழைப்பின்சிகரம். இரண்டுவேளை உணவைத் தவிர வேறு எதையும் எண்ணக் கூடாத ஒரு ஏழை குமாஸ்தாவின் நெஞ்சத்திலே ஒரு ஆசை தோன்றுகிறது. அந்த ஆசை நிராசையான கதைதான் மேலங்கி, உயர்ந்த ரக மேலங்கி ஒன்றை அடைய அவன் எண்ணுகிறான். தன் சக்திக்கு சவால் விடும் அதை எப்படியும் பெற்றே தீருவது என்று முடிவு கட்டுகிறான், இரவு பகலென்று உழைக்கிறான். உணவை பணயம் வைக்கிறான், முடிவில் அத்தகைய மேலங்கி ஒன்றையும் வாங்கிவிடுகிறான், ஆனால், அந்த ஏழையின் இன்பத்தையும் ஒரே நாளோடு பறித்துக் கொள்கிறான் கோகேல், திருடன் ஒருவன் உருவாகிறான். மேலங்கி களவாடப் படுகிறது. சக நண்பர்களின் கிண்டலைத் தாங்க முடியாத அந்த குமாஸ்தா மரணத்தை அணைக்கிறான்! ஒரு குமாஸ்தாவின் வாழ்வை பின்

● தொடர்ச்சி 12-ம் பக்கம்

★★★ கோகேல் ★★★

ரஷ்ய நாடகத்தின் முன்னோடி

அணை உடைத்த வெள்ளமென துள்ளி எழும் நெஞ்சகத்து ஆசை—அதை வெளிப்படுத்தும் நீண்டதொரு சூருவளிப் பெருமூச்சு - இரவு வேளையில், இந்த நிலையில், உருக்குலைந்த தோற்றத்துடன் நின்று கொண்டிருந்தான் ஒரு வாலிபன். ஆர்வத்தின் ரேகைகள் படர்ந்திருந்த அவனது ஏக்கப் பார்வையின்முன் நிழலாடிக் கொண்டிருந்தன ஒரு கண்கவர் வண்ண மாளிகையின் விளக்குகள் — பெருங்கூட்டம்! அது ஒரு நாடகக் கொட்டகை! இதயத்தைக் கவ்வி இழுத்த அந்த மணிமாளிகைக்குள் அடியெடுத்து வைத்தான் அவன். பாதம் தொட்ட இடமெல்லாம் — பார்வையின் சாயல்பட்ட இடமெல்லாம் அணுஅணுவாக இனித்தது அவனுக்கு. ஆனால்...?

“யாரடா அவன்...?”—நாடகத்திலே குறுக்கிட்டு குழப்பம் விதைக்கும் ‘வில்ல’ னைக் கேட்டது இப்படியொரு குரல்.

திரும்பினான் வாலிபன், ‘இருதயம் என்றால் என்ன? அதிலே இரக்கம் என்றும்ஒன்றுண்டோ’ என்ற கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு முரட்டு முகம் அவனைப் பார்த்தது. இரும்புக் கரங்கள் அவனைப் பற்றின.

“கொட்டகைக்குள் செல்ல வேண்டும்; நாடகம் பார்க்க” - வந்த காரியத்தைச் சொன்னான் வாலிபன்.

சிரித்தான் அந்த மனிதன், குரல் உயர்த்திக் கொக்கரிக்கும் கோட்டானைப் போல். “பணம் படைத்தோரின் உல்லாச பூமி இது—பராரி நீ புகுந்துவிட்டாயே, பணமிருக்கிறதா?” என்று கேட்டான்.

‘இல்லை’ என்று சொல்லாமல் சொன்னது வாலிபனின் சோகப் பெருமூச்சு.

சிரித்த முரடன் சீறினான். “போ வெளியே” என்று பாய்ந்தான்.

அழகிரி மன்றம்-இலவச
இரவுப்பள்ளி நிதிக்காக
12-12-54ஞாயிறுமாலை6-மணிக்கு
திருவல்லிக்கேணி
கலாமண்டபத்தில்
மு. கருணாநிதி
அவர்கள் தலைமையில்

அந்தப்புரம்
[நாடகம்]

கதை, வசனம்; எஸ், பி. நாதன்
நடிப்பவர்கள்:
வளையாபதி ஜி. முத்துகிருஷ்ணன், ரேவதி, சி. ஆர். ராஜகுமாரி, ராஜேஸ்வரி, எம். கே, கோவிந்தராஜன், எஸ். எஸ். கதிரேசன், எஸ். ஆர். தசரதன், பங்காரு, ஓ. ஏ. கே. தேவர், ஏ. என். கிருஷ்ணன்.
கட்டணம் ரூ. 1 அணா 8.

“ஐயா! என்னை தயவுசெய்து உள்ளே விடுங்களய்யா! பார்வையாளனாக அல்ல; பணியாளனாக! பேசாத சிலைகள்-உயிரில்லா கருவிகள்—எத்தனையோ இருக்கின்றனவே உங்களிடம், அவைகளில் ஒன்றைப்போல நான் இருந்துவிட்டுப் போகிறேன். நான் எழுதுவேன்; நடிப்பேன்! ஐயா... என் ஆசைத் தளிரைக் கிள்ளி எறிந்து விடாதீர்கள்” வாலிபன் முடிக்கவில்லை. அதற்குள் அவனது பிடரியில் குடியேறின அந்த முரடனின் கரங்கள். மறுகணம் நடுத்தெருவை நோக்கித் தள்ளப்பட்டான் வாலிபன்.

தோல்வியும். அவமானமும் கண்ணீர் உருவிலே பொங்கின. நீர் படர்ந்த கண்களால் அந்த அழகு மண்டபத்தைப் பார்த்தான்...பார்த்துக் கொண்டே நின்றான்.

இப்படி ஒரு காலம்—

* * *

அடுத்த ஆறாவது ஆண்டு...

அதே நாடகக் கொட்டகை. ‘புதியதொரு நாடகம்—அதுவும் மன்னனின் முன்னிலையிலே’ என்ற இரட்டைச் சிறப்பு! கொட்டகைக்குள் என்றுமில்லாதக் கூட்டம். உள்ளே ஜார் மன்னன் அவனது பக்கத்தில் பூரிப்பின் அரவணைப்பிலே - ‘அடங்கேன்’ என்று ஆட்டம் போட்ட ஆனந்தத்தின் பிடிப்பிலே சிக்கியவனாக உட்கார்ந்திருக்கிறான் ஒருவன். சற்றைக்கொருதரம் தானாகவே சிரித்துக் கொள்ளும் அவன், நமக்கு முன்பே அறிமுகமானவன். வேலை கேட்க வந்து, விழியிலே நீரை நிரப்பிக் கொண்டு துரத்தப்பட்டானே அன்றொரு நாள், அந்த வாலிபன்தான் அவன். ஆனால், அவன் எப்படி உள்ளே நுழைந்தான்— தன்னிச்சையாய் சிரித்து மகிழ்வானேன்—என்ற சந்தேகம் எழலாம். அந்த சந்தேகத்தின் மடியிலே மறைந்திருக்கிறது ஒரு உண்மை. அவன்தான் அன்று நடக்க இருக்கும் நாடகத்தின் சிருஷ்டிகர்த்தா. எத்தனையோ இரவுகளைப் பகலாக்கி, இருள் கவிந்திருந்த தனது வாழ்க்கையிலே ஒரு ஒளி விளக்காக அந்த நாடகத்தைத் தீட்டியிருந்தான் அவன். ஆகவேதான் எல்லையில்லா களிப்பிலே நீந்திக் கொண்டிருந்தான். நாடகம் தொடங்கியது. தொடக்கம் முதல் இறுதி வரை நாடகத்தின் ஒவ்வொரு அங்குலமும் சுவைத்தது. திரண்டிருந்த மக்கள் கூட்டம் அந்த நற்சுவையை, கைதட்டல்கள் வாயிலாக, வாய்விட்டுக் கூவிய மகிழ்ச்சி ஆரவாரத்தின் மூலமாகத் தெரிவித்தார்கள். அந்த நாடக ஆசிரியனே தனது ஆசனத்தைவிட்டு எழுந்து குதிக்க ஆரம்பித்து விட்டான். தனது உழைப்பை மக்கள் மன்றம் ஏற்றுக் கொள்வதைக் காணும்போது ஒரு எழுத்தாளனுக்குத்தான் எத்தனை மகிழ்ச்சி! தனது புகழுக்கு வித்திட்ட அந்த முதல்நாள் அனுபவத்தைப் பற்றி எழுதுகிறான் அவன்:

“அன்று நான் நாடகக் கொட்டகைக்குள் மனிதனாக நுழையவில்லை பறவையாக பறந்து சென்றேன். மக்கள் நாடகத்தை ரசிப்பார்களோ—என்ன மதிப்பு தருவார்களோ என்றெல்லாம் நான் அஞ்சவில்லை. நாடகத்தைப்பற்றி அபிப்பிராயம் தெரிவிக்க தகுதியுடையதாக நான் ஒன்றைத்தான் எண்ணினேன். அதுதான் என்மனம்! அதற்குத்தான் நான் பயந்தேன், முடிவில் அது நல்ல தீர்ப்பையேவழங்கிவிட்டது”

இப்படி முயற்சியின் உதவியால் - உழைப்பின் முழுப் பலனை ஏற்று - விரட்டிய இடத்திலேயே வெற்றி மாலை சூடிக் கொண்ட அந்த வாலிபன்தான் அன்று நடைபெற்ற “இன்ஸ்பெக்டர் ஜெனரல்” என்ற நாடகத்தின் பிதா—ரஷ்ய இலக்கிய மேதை-கோகேல்!

* *

விளையும் பயிர் முளையில் என்பார்கள், உலகத்திற்கு ‘நல்லது’ செய்த பெரிய மனிதர்கள் அத்தனைபேரும் பாலூட்டும் பருவத்திலேயே தங்கள் எதிர்காலத்தை ‘ஜாடை’யாகக் காட்டியிருக்கிறார்கள். கோகேல் மட்டும் அதற்கு விலக்காக முடியுமா? எழுதவேண்டும்என்றஎண்ணம் பிள்ளைப் பருவத்திலேயே — வானத்துப் பிறையாக வளர்ந்த காலத்திலேயே அவனதுஉள்ளத்திலே பதிந்து விட்டது. வளரும் முளையை வகையாகக் காக்கும் நிலையில்—அவனது தந்தை அந்த நெஞ்சத்துஆவலுக்கு புடமிட்டு வந்தார். அவர் ஒரு எழுத்துப் பித்தர். ‘விளையாட்டு’க்காக எழுதுவதில் பேரார்வம் கொண்டவர். ஓய்வு நேரத்தில் அவர் யோசித்து யோசித்து எழுதிய குட்டிக்கதைகளை தனது மகனிடம் படித்துக் காட்டுவதில் அவருக்கு இன்பம்-இதய திருப்தி! தந்தையின் அந்த தாங்காத ஆவல்தான் மகனின் நெஞ்சத்தில் இடம்பெற்று விட்டது. பள்ளிப்பருவத்திலேயே அவனை ஒரு இலக்கிய வெறியனாகவும் மாற்றிவிட்டது!

பள்ளிக்கூடக் கட்டிடத்திலிருந்து வெளியுலகில் அடியெடுத்து வைத்தபோதுதான் வாழ்க்கையில் முன்னேற எத்தத்தனையோ தடைகளைத் தாண்டியாக வேண்டும் என்று உணர்ந்தான். கோகேல், தானும் ஒரு எழுத்தாளன் என்று மக்கள் மனதிலே நல்லதோர் இடத்தைப் பெறுவதற்கு முன்பு அவன் ஏற்ற இன்னல்கள் ஏராளம்! தந்தை இட்ட கட்டளை; வயிற்றுப்பசி தீட்டிய சட்டம்; இவைகளினால் சில ஆண்டுகாலம் அவன் செய்துவந்த குமாஸ்தா உத்தியோகம் — காவிய உலகத்தைத் தேடி சிறகடித்துப் பறந்து கொண்டிருந்த நெஞ்சத்தை கணக்கேட்டில் பதியவைக்க அவன் எடுத்துக் கொண்ட சங்கடம் — அதில் கண்ட பெரும் தோல்வி- கடைசியில் அந்த வேலையை உதறித்தள்ளிய போது இலக்கியஉலகம் எடுத்து வீசிய வெறுப்புக் கணைகளின் வேகம்—வறுமையின் அணைப்பிலே உற்ற வேதனை — இவை அனைத்தையும் சுமக்க முடியாமல் தடுமாறிய வண்ணம்தான் கோகேல் எழுதினான். ஆகவேதான் அவனது எழுத்திலே எக்காளமிடும் ஏழ்மையின் வேகம் காணப்படுகிறது, வறுமை குவிக்கும் சோதனைகள் விளக்கப் படுகிறது. அந்தத் தனிப் பண்புதான் அவனை ரஷ்யாவின் முதல் இலக்கிய மேதையாகஆக்கியும் வைத்தது.

* * *

புகழடைவதற்கு முன்பு மேதைகளுக்கு எதிர்ப்பு அதிகமிருக்கும்; ‘முடியாது இவனால்’ என்ற ஏளனமிருக்கும். பின் உழைப்பின் பலனேற்றவுடன் அந்த எதிர்ப்பும் ஏளனமும் பொறாமையாக மாறும்; “அபத்தம்; அநியாயம்” என்ற வெறுப்பு விமர்சனங்களைக் கொட்டிக் குவிக்கும்.

இப்படி என்றும் எதிர்ப்பிலே சிக்காமல் தப்பியவர் கோகேல். அவரது காலத்தில் அவரது சக எழுத்தாளர்களே அவரை போற்றியிருக்கிறார்கள். புரட்சிக் கவி புஷ்கின்தான் கோகேலின் உலகப் புகழ் பெற்ற நாடகங்களுக்கு மூலகாரணம். விலை மதிப்பில்லாத ஊக்கத்தை வழங்கியவன்! மற்றொரு

★ 10-ம் பக்கம் பார்க்க

எஸ். முத்தையா நினைவு
இரவு பள்ளி வளர்ச்சி
நிதிக்கூட்டம்
காலம்: 12-12-54
ஞாயிறு காலை 9-மணி
இடம்: லட்சுமி தியேட்டர்
(பெரம்பூர் பேரக்ஸ்)
தலைவர்: தென்னரசு
பேச்சாளர்கள்:
பன்மொழிப்புலவர்.
க. அப்பாதுரை
எம். ஏ. எல். டி.
பொருள்: முத்தையாவும்,
வகுப்புரிமையும்
தோழர் வி. சிவப்பிரகாசம்
சட்டமும், சமுதாயமும்
மு. கருணாநிதி
இன்றைய அரசியல்
நன்கொடை அணா 8, 4.
குறிப்பு: கல்லக்குடி நிதி அளிக்கப்படும்.
அமைப்பு: தி. மு. க. சூளை 17-வது வட்டம் சென்னை.

10·12·54 12

கடைசிப்பக்கம்

வி.ஆர்.சாமி- ந.லட்சுமணபுரம்

(?) காங்கிரஸ்காரர்கள் தி. மு. கழகத் தோழர்களைக்கண்டால் காய்ந்து விழுவது ஏன்?

காய்ந்தால் விழத்தானே வேண்டும் — மரத்திலேயிருந்து சருகுகள் விழுவதை நீங்கள் பார்த்த தில்லையா?

பி. வேலாயுதம்-ஒதியடிக்காடு.

(?) ஏவல், பில்லி, சூனியம் பற்றி தங்கள் உண்மையான கருத்தென்ன?

மனக் குழப்பத்தாலும், பய உணர்ச்சியாலும், மூட நம்பிக்கையின் வளர்ச்சியாலும் எழுந்த சொற்கூட்டங்கள் அவை.

தம்பி-சித்தூர்.

(?) புதிய நாடகச் சட்டத்தை சென்னை சர்க்கார் கொண்டு வருவதின் நோக்கமென்ன?

ஆரியம், ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கிறது—திராவிட சமுதாயத்தையும் பின்னுக்கிழுத்து, காமராசர் மந்திரிசபையையும் கவிழ்க்க இந்த சதி உருவாகிறது.

சுந்தரவரதன்-அம்பத்தூர்.

(?) தற்காலத்தில் இந்தியாவில் பலவீனம் அடைந்துவரும் அரசியல் கட்சியாது? பலவீனத்தின் காரணம் என்ன?

பலவீனம் அடைந்து வரும் கட்சி காங்கிரஸ் கட்சி. அது பலவீனமடைவதற்குக் காரணம்: காந்தியார் சொற்படி அதை இதுவரை கலைக்காமல் இருப்பதுதான்!

சி. தெய்வீகன்—
தோட்டக்கோம்பை.

(?) கணவன் ஒரு கட்சி—மனைவி ஒரு கட்சி—அந்தக் குடும்பம் எப்படியிருக்கும்?

ஒரு சிறிய சட்டசபையாக இருக்கும். சபாநாயகர் யாரியாரும் ஒரு கட்சியாக இருந்தால்—முதன் மந்திரி பதவி கணவனுக்கும் மனைவிக்கும் மணிக்கொருமுறை மாறிக் கொண்டேயிருக்கும்.

பி. வி. செல்வம், சூளை-சென்னை.

(?) அரிச்சந்திரன் பொய்யே சொன்னதில்லையா?

ஏன் சொல்லவில்லை—கொலு மண்டபத்தில் நுழையும் விசுவாமித்திரனைப் பார்த்து, "அடியேன் குடிசைக்கு வந்தது பற்றி சந்தோஷம்" என்று அரிச்சந்திரன் கூறினானே; அதுவும் ஒரு பொய் தானே!

வருந்துகிறோம்

சிறந்தஎழுத்தாளரும், பத்திரிகைத் தொழிலில் அனுபவமிக்கவரும், தேசிய போராட்டத்தில் பங்கேற்று கஷ்ட நஷ்டங்களை ஏற்ற வருமான கல்கி-கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஞாயிறு காலை இயற்கையெய்தினார் என்ற செய்தி நம்மையெல்லாம் சோகத்திலாழ்த்தியது. அன்னவர் குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் நமது அனுதாபம் உரித்தாகுக.

கோகேல்.........

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

ளச் செல்லும் இந்தக் கதைதான் "நான் நம்பும் எனது மனதிற்கு முழு திருப்தியைத் தந்தது" என்று எழுதியிருக்கிறான் கோகேல்.

★ ★ ★

காதலைப் பற்றி எழுதாத கதாசிரியர்களை நாம்கண்டிருக்கமுடியாது. ஆனால் புதுவழி தேடிய கோகேல் அதனின்றும் கூட விலக்காகிறான். அதிலும்புதுவழி காணுகிறான். அவன் எழுத்துகளில் காதலின் வாடையே கிடையாது. உயிரோடு உலவிய நடைப் பிணங்களைத்தான் அவன் தனது கதா நாயகர்களாகத் தேடி அழைத்தான். அவர்களை முன்னிருத்தி சமுதாயத்தைக் கப்பியருந்த கோடானுகோடி கேடுமதிச் செயல்களைச் சாடினான். உழைப்பவர்களின் உதிரத்தை குளமாக்கி — நீச்சலடித்து மகிழ்ந்திருந்த மமதையாளர்களுக்கு சவுக்கடி கொடுத்தான்.

இப்படி தனது கலைத்தொண்டை ஏழைகளின் வாழ்வு சற்றேனும் உயர்வடைய வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன்நாட்டுக்கு அர்ப்பணித்த கொகேல் — சாகும் நேரத்தில்தான் ஈட்டிய பொருள் அனைத்தும் கூட ஏழைகளுக்கு அன்புப் பரிசாக அளித்தான், என்றும் விடாத புகழ் மாலைகளை பதிலுக்குப் பரிசாகப்பெற்றான்.

★

பிறைவானம்...

○ 9-ம் பக்கத் தொடர்ச்சி

இரத்தக் காயங்கள்—உடல் வலி—வாட்டும் பசி—இவை ஒன்றையும் அவன் பொருட்படுத்தவில்லை; தன்னை மிருகமாக நடத்தியவரின் உயிரைக்காக்க, ஆஸ்பத்திரியை நோக்கி வண்டியை இழுத்துக்கொண்டு ஓடினான்.

★ ★ ★

கண்களை விழித்த முதலாளி மிரள மிரள விழித்தார். தன் எதிரிலே உடலெல்லாம் கட்டுகளுடன் வருத்தம் தோய்ந்த முகத்துடன் உட்கார்ந்து கொண்டிருந்த மணியைப் பார்த்தார். அப்போதுதான் நடந்த விபத்து அவருக்கு ஞாபகத்துக்கு வந்தது. உடலெல்லாம் கட்டுகளுடன் ஆஸ்பத்திரியில் இருப்பதை உணர்ந்தார்.

சற்றைக் கெல்லாம் அங்கு வந்த டாக்டர் நடந்தவை அனைத்தையும் விளக்கினார். மணியின் துணிகரமான செயலையும் ஒரேயடியாகப் புகழ்ந்தார். "உங்கள் உயிரைக் காப்பாற்றியவன் நானல்ல; இந்த மணிதான்!" என்றும் அவரிடம் சொல்லி மகிழ்ந்தார்.

"ஆ...அப்படியா?" என்று உரக்கக் கூவினார் முதலாளி. அதுஆனந்தக் குரலா? வழக்கம் போல் கோபக் கூச்சலா? கதையின் முடிவு அதற்குப் பதில் சொல்லும்.

ஃ ஃ ஃ

மணி இப்போது பைங்காட்டுக்கு வண்டியிழுத்துச் செல்லவில்லை. அழகான பூரணி ஜோடி மாடுகள் பூட்டிய புத்தம் புதிய வில் வண்டியில் பைங்காட்டிலிருக்கும் பள்ளிக்கூடத்திற்கு 'ஜாம் ஜாம்' என்று சென்று வருகிறான்.

இடமாற்றம்

டிசம்பர் 15-முதல் முரசொலி அலுவலகம் கீழ்க்கண்ட முகவரிக்கு மாறுகிறது :

4/128, மவுண்ட் ரோடு, சென்னை-6

★ முரசொலி ★

பொங்கல் மலர்

★

★ "பொங்கல் மலர் வருகிறது, என்ற சுவரொட்டிகளைப் பார்ப்பதிலேயே ஒரு தனி இன்பம் காணுகிறோம்" என்று பாசமுள்ள தோழர்கள் பலர் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இலட்சியக் கொடியின் வண்ணத்தோடு திகழும் முரசொலியின் பொங்கல் மலர் தெவிட்டாத தேன் விருந்தாகத் திகழ முடிந்ததெல்லாம் செய்யுங்கள் என்று உற்ற நண்பர்கள் உரைத்த வண்ணமிருக்கிறார்கள். இந்த நல்வாழ்த்துக்கள் நமக்கு மேலும் மேலும் உற்சாகத்தை அளிக்கின்றன.

★ அறிஞர் அண்ணாவின் அருமையான கட்டுரையொன்று மலரில் இடம் பெறுகிறது.

★ கருணாநிதி எழுதும் "மணி மகுடம்" என்ற புதுமை நாடகம் மலரில் வருகிறது.

★ சுவையள்ளும் சுரதாவின் கவிதைகள்.

★ திராவிடத்துக் கவிஞர் பெருமக்களின் எழுத்தோவியங்கள்,

★ தமிழ் மேதைகள் தரும் இலக்கிய விருந்துகள்.

★ முன்னணி ஓவியர்கள் தரும் வண்ணச்சித்திரங்கள்

★ நடிக நண்பர்கள் — கலைவாணர்கள் எழுதும் சிறப்புக் கட்டுரைகள்.

இன்னும் பல புதிய பகுதிகளுடன் மலர் வரும். தம்பி, தங்கைகளுக்கு ஒரு இன்பச்சேதி பிறைவானம் மலரில் ஒரு தனிப்பகுதியாகத் திகழும்.

விலை ரூபாய் 2

இன்றே உங்களூர் விற்பனையாளரிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்.

சந்தாதாரர்கள் ரூ 2—4—0 அனுப்பி வைத்தால் மலர் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்-

மு. கருணாநிதியால் 'முரசொலி' அச்சகத்தில் அச்சிடப்படுகிறது.
அலுவலகம்: 62. எஸ். பி. சன்னதி தெரு. ராயப்பேட்டை, சென்னை—14.